உ

கணபதி துணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."—திருக்குறள்

தொகுதி. 9 | பிங்கள வூ வைகாசி & ஆனிமீ 1917 June & July | பகுதி 5 & 6

கல்வியும் மதமும்.

நமஹா பாஷையின் முக்கிய ஸஞ்சிகையில் "இந்தியக்கல்வி முறை" என்னும் விஷயம் எடுத்துக்கொள்ளப்பட்டுத் தர்மமென்பது, காலம் தேசம் ஜாதி தொழில் ஆச்ரமம் என்னும் இவற்றுக்கேற்றபடியாக மாறுவதொன்றென்றும், அந்தந்தத் தேசத்தாரும் ஜாதியாரும் காலத்துக்கேற்றபடியாகத் தமது தமது தர்மத்தில் மாறுபடாமல் ஒழுகிவந்தாராயின், அவருடைய தாய்நாடு செழிப்புறுமென்றும், அவனவனுடைய தர்மத்தின் உணர்ச்சியான கல்வியாலே பெறப்படும் என்றும், ஆகையினால் கல்வியின் முறையானது தேசத்துக்குத் தேசம் வேறுபட்டிருக்குமென்றும், நமது இந்திய நாடாகிய நம் தாய் நாட்டில் கற்பிக்க வேண்டிய முறை நம சாஸ்திரங்களைப் பொருத்தபடி இந்தியக் கல்வி முறையாகவே இருக்கவேண்டுமென்பதும் ஒருவாறு குறிக்கப்பட்டது.

ஒரு தேசத்துக் கல்விமுறை, அந்தத் தேசத்துத் தர்மத்தை வளர்க்கும் முறையில் கற்பிக்கப்பட வேண்டுமென்றால், அந்தத் தேசத்தின் மதக் கொள்கைகள் அவசியம் ஆராயப்பெறவேண்டும்.

நாம் எடு[illegible] ''இந்தியக் கல்விமுறை''யாதலின், இந்திய தேயத்தினது மதக்கொள்கைகளே இப்போது பேசப்பெறல் வேண்டும்.

நமது தேசத்தில், மிகப் பழைய காலமுதல், தத்வதர்சிகளாகிய ஆசாரியர்கள், வேதத்தையே ஆதாரமாகக்கொண்டு உலக தத்வங்களையும் ஆத்மதத்வங்களையும் தாம் உணர்ந்து அநுபவித்து வந்ததேயல்லாமல், மற்றவர்களுக்கும் உரைத்து வந்துள்ளார்கள். உலக தத்வங்களை முறையே யுணர்ந்து சித்தசுத்தி தோன்றி, ஆத்மதத்வ வுணர்ச்சியில் முதிர்ந்து, அநித்யமான பொருள்களிடத்தில் வெறுப்புப் பிறந்து, அவற்றை மற்றைத்தமக்குக் கீழ்ப்பட்ட பக்குவிகளுக்கென்று த்யாகம் செய்துவிட்டு, நித்யமான நிரதிசய வீட்டின்பத்தைப் பெறுவதே பயனாகக் கருதி யுழைத்திருக்கின்றனர். ஆதலின், இந்த ஆத்மயாத்திரையில பக்குவிகளுக்கு ஏற்பக் காமங்களும் அவற்றை வற்புறுத்தும் மதக் கொள்கைகளும் வேறுபட்டிருக்கின்றன. இந்த ஆஸ்திக மதக்கட்டுக் கொள்கைகள் வேறுபட்டிருப்பினும் பயனொன்றாகவே கருதப்படுகிறது.

இம்மதக் கொள்கைகளெல்லாம் தக்க காரணங்களுடனே நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. அவற்றுக்குத்தக்க சாஸ்திரங்களையும் பெற்றிருக்கின்றன. இவற்றின் உண்மைகளைக் கிரமப்படி உணர்ந்தேறாத பிறநாட்டாரிற் பலரும் நம் நாட்டாரிற் சிலரும், ''இந்தியாவில் மதக் கொள்கைகள் வேறுபட்டிருக்கின்றன. அவைகள் தமது காலவரையறையைச் செவ்வனே குறிக்கவில்லை. பல உட்கலகங்களால் நேர்ந்த மனவேறுபாட்டைக்கொண்டு அவைகள் மாறுபாட்டுடன் ஏற்பட்டிருக்கவேண்டும். ஆகையினால் அவைகள் உறுதியான கொள்கைகளையுடையனவாகக் கொள்ளப்பெறமாட்டா'' என்று குறைகூறுவர்.

ஆனால், அவர்கள் கூறுகிறபடியே கொள்கைகள் மாறுபட்டுள்ளன வென்றாலும், குறை கூறுவதற்கு ஏதும் ஆதாரம் காணேம். ஏனெனில், இந்துமதக்கொள்கைகள் எல்லாம் ஒரு

காலத்தில் ஒருவரால் உண்டாக்கப் பட்டனவாகக் கொள்வதற்கு இடமில்லை. இந்தியா, மிகவும் புராதன தேசமாதலால், பிறதேசத்தினது நாகரிகவுதவியை வேண்டாமலே, காலடைவில் மனிதவர்க்கத்தின் ஏற்றத்துக்குத் தகுந்தபடியான நாகரிகப் பெருக்கத்தில் ஏறி, உலகதத்வம ஆத்மதத்வம் ஆகிய இரண்டிலும் விருத்தியடைந்து வந்திருக்கின்றது. ஆகவே, மேற்சொன்னமாறுபட்ட கொள்கைகளெல்லாம் ஸ்ரேயானகரமமாகக் கொள்ளப்படுகின்றன எனினும் பயன் மாத்திரம் ஒன்றாகவே கருதப்படுகின்றது. பயனாவது வீடுபேறு.

ஒரு மதமானது, ஒருவராலேயே உண்டாக்கப்பட்டதாயிருந்திருப்பின், அவர் உயிருடன் இருக்கையில் தானும் பெருக்கத்தையடைந்து அவருக்குப் பிற்காலத்து சுருக்கமடைந்து ஆதரிப்பார் அற்றும் கழிபலாகும். இம்மதமோ, ஒரே உண்மையைக் கைப்பற்றிய பலவேறுதத்துவதர்சிகளாற் பலவேறு காலங்களில் பலவேறு கொள்கைகளுடன் ஆதரிக்கப்பட்டு வந்திருக்கிறது. தத்வ உணர்ச்சிக்கு மிகவும் பொருத்தமானது. தர்க்க நியாயங்கட்குத் தோலாதது. வேதத்தையே தனக்குப் பிரமாணமாகக் கொண்டுள்ளது. தக்க ஸாதுவான உக்திகளால், தன்னை அவலம்பித்துள்ளாரை படிப்படியாக மேலேற்றி, நிவர்த்திமார்க்கப் படியேற்றி, ஸதானந்தத்தைப் பெறச் செய்வது. அறுபல முறைகளையும் உலகம் விருத்தியடையும் முறையையும் ஒருங்கே யநுசரித்துப் போவது. தத்துவசாஸ்திரங்களில் முறைபோகி பதுபவமுறையைக் கைப்பற்றி ஒழுகும் பிறதேசத்தினரும் தலைபணைத் தானந்திக்கத்தக்க உண்மைகள் வாய்ந்துள்ளது. இத்தகைய மதத்தின் கொள்கைகள், தற்காலத்தில் நம்மவர்களாலேயே அநுசரிக்கப்படாமல் பிறமதக் கொள்கைகளிற் புகுந்து தருக்கியிருப்பதால் கைசோர விடப்பட்டிருக்கிறது. நம்மவர்களிற் பலரும் மதக் கொள்கைகளைப் பின் பற்றியிருப்பதுடன்; மதக் கொள்கைகளில் குறைகண்டு முற்று முணர்ந்தவர் போலப் பழித்தும் திரிகின்றனர். இதற்குக் காரணமென்னவெனில் ஆராய்ந்திடின, கல்வி பயிற்றும் பருவத்தில் சாஸ்திரக் கொள்கைகளை

யுணர்த்திவரும்போது மதக் கொள்கைகளையும் கொடாதிருந்தது தான் என்று நன்றாக வூஹிக்கலாகும். ஒருமதச்சார்பில் உதித்தவர், அம்மதக்கொள்கைகளுடனும் கொள்கைகளையுணர்த்தும் சரித்திரங்களுடனும் போதிக்கப்பட்டு வந்திருப்பின், அவர் தம்மதத்தில் நின்று தம்மதக்கொள்கைகளைப் பாராட்டி யநுசரித்து அம்மதத்தைத் தக்கவழியினில் பெருக்கிக்கொண்டும் போவர். அங்ஙனமின்றிப் பிறமதக் கொள்கைகளுடனும் அக்கொள்கைகளை யுணர்த்தும் சரித்திரங்களுடனும் கற்பிக்கப்பட்டு வந்தவரைத் 'தம்மதக் கொள்கைகளைத்தாமே விரோதிக்கிறவர்' என்று நிந்தித்தல் தகாது.

நமது தாய்ப்பாலுடன், நமது தேசாபிமானப்பாலும், புகட்டப் பட்டிருப்பின் யாதும் குறைநேர்ந்திராது. அப்படியன்றித் தாயையும், 'பேதை' என்று அவளது பருவத்துக்கு ஏற்றிவைத்த ஒரு குணத்துக்கு உரைவதப்பாளாக்கி, என்றும் அக்குண முடையவளாகவே இருக்கும்படிச்செய்துவந்தோமானால், தாயர்கள் எங்ஙனம் தேசத்தொழுங்கிலேறி மதக் கொள்கைகளைக் கைப்பற்ற முடியும்? ஆகலின், ஆண் பெண் என்னும் இருபாலர்க்கும் ஏற்றவாறு நம் கல்விகற்பிக்கப்படல்வேண்டும். மதக்கொள்கைகளுடனும் நமது முன்னோர் சரித்திரங்களுடனும் அப்படி கற்பித்து வந்தால், நம்மாணவர் தம்தாய நாட்டைப் போற்றுவதுடன் அந்நாட்டின் முன்னேற்றத்தைக்கோரி, அதற்கு ஸாதனமான தமது ஸநாதன தர்மத்தைக் கைசோரவிடாமல் அந்தக்கொள்கைகளைப் பின்பற்றி நடப்பர்.

ஒருதேசத்து ராஜாங்கமுறையும் சாஸ்திர முறையும் அத்தேசத்து ஆசார முறையையும் அறநெறியையுமே துணையாப்பற்றியிருக்கின்றன. அத்தேசத்து அறத்தின் நெறிகள் சிறுபோது முதலே அநுசரிக்கப்படாதொழியின் அத்தேசத்து ஆசாரம் சீர்படாது. ஆசாரத்தில் சீர்பாடுடையாக ஒருவன், அத்தேசத்து சாஸ்திர வுண்மையைத் தெரிந்து உபந்யஸித்தலும் ஒன்றறக்கிடைத்து மற்றொன்றை வளர்த்தலாகும். தன்னெறியில் நில்லாதவொருவனது

சாஸ்திர உபதேசங்களைப் பின்பற்றி நடப்பார் ஒருவரும் இலராவர். இன்னவர் நிறைந்து நடக்கிற ராஜாங்கம் அத்தேசத்தை முன்னுக்குக் கொண்டுவராது ஒழியும் என்பதில் ஸந்தேஹம் யாது?

ஆனால் இப்போதாகிலும் நாம் விழித்துக்கொண்டு, தற்கால மாணவர்களுக்குக் கல்வியுடன் மதக்கொள்கைகளைப் போதித்து வருவோமாயின், நம் மதக் கொள்கைகள் அநுசரிக்கப்பெற்று நமது ஆசாரமுறையும் ஒழுங்கு பெற்றுவரும். அப்போதே தேசம் க்ஷேமமாகும். இப்போதிருக்கும் நூதனக் கல்விமுறையால் நமது அறிஞர்கட்கு நூதன அறிவும் நூதன சித்தவ்ருத்தியும் நூதன ஆசையும் உற்பத்தியாயிருக்கின்றன. இவை நமது தேச தர்மத்தை முற்றிலும் கெடுத்து வருகின்றன. எது தங்களையும் தங்கள் தேச தர்மத்தையும் முன்னுக்குக் கொண்டுவருமோ அந்த முறையைச் சிந்திக்கிறதுமில்லை; சிலகாலையில் ஒருகால் இருக்கும்படிச் செய்தாலும் அநுசரிக்கிறதுமில்லை. தங்கள் சுயத்தையேபாராட்டும் முறையிலேயே செல்லுகிறார்கள். வேததத்வங்களையும் அவற்றை யநுசரித்த சாஸ்திர நிபந்தனைகளையும் கண்டித்து வீண்வழக்கிடுகிறார்கள். அவர்கள் சொல்லும் வழக்குகளிற் சிலவற்றை இங்கே குறிப்பிடல் தகும். அவை:—

"ஒருவருக்கு இப்பிறப்பில் நிகழும் ஸுகதுக்கமான ஸகலவிஷயங்களும் முற்பிறப்பின் பயனாகவே ஏற்படுகின்றன வென்றும், அதனை மீறித் தாமாக யாதொன்றும் செய்து கொள்ளமுடியாதென்றும், இவருடைய முயற்சிகளெல்லாம் விதியை அநுசரித்தே பயன் தருமென்றும் வேதசாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அப்படியானால், அவைகள், "இதைச்செய்; இதைச்செய்யாதே" என்று விதிவிலக்கான தர்மங்களை ஏன் விதிக்கவேண்டும்?"

"யாரும் இவ்வுலகிலேயே மிக்க இன்பத்திலும் மிக்க துன்பத்திலும் உழன்று வருவதைக் கவனிக்கிறோமல்லவா? பாபபுண்ணிய பலன்களை யநுபவிக்க வேறு லோகங்களை உண்டென்று கொள்வதற்கு யாது காரணமிருக்கின்றது? உலகங்களையெல்லாம் ப்ரதக்ஷிணித்தமாகப் பரிசோதித்த மேல்நாட்டார்களும் வேறு லோகங்கள் உண்

டென்று கொள்ளவில்லையே. அன்றியும், இறந்தவர் ஸ்வர்க்கவாஸிகளாக இருக்கின்றார்களா? நரகவாஸிகளாக இருக்கின்றார்களா? புழுபூச்சிகளாகப் பிறந்திருக்கின்றார்களா? மனிதர்களாகவே பிறந்திருக்கின்றார்களா? என்று யாதொரு விதத்திலும் நிச்சயிக்க முடியாதிருக்கும்போது சிராத்தம் செய்வது எதன் நிமித்தம்?''

''கர்மபலன்களினாலோ இயற்கையினாலோ முயற்சியினாலோ உலகவியவகாரங்கள் நடந்து வருகின்றனவென்றால், எல்லாம்வல்ல ஒரு தலைவனான ஈச்வரன் ஒருவன் உண்டென்று ஏன் கொள்ள வேண்டும்''.

''வேதத்தை அபௌருஷேயமென்று சொல்கின்றார்களே; ஒருவராலும் உச்சரிக்கப்படாமல் ஒரு வார்த்தையும் பிறக்க நியாயமில்லையே; அப்படியிருக்க அனந்தகோடி வார்த்தைகளடங்கிய வேதம் அநாதியானதெப்படி? அன்றியும் வேதவாக்கியங்களிற் சில தமக்கு முன்னிகழ்ந்த பல நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றபடியால், பல சரித்திரகாலங்கட்குப் பின்னரே வேதம் ஏற்பட்டிருப்பதாகக் கொள்ளக்கிடைக்கிறதன்றோ? ஆகையால் அவை எப்படிப் பிரமாணமாகும்?'';

என்னும் இவை போன்ற கேள்விகளை எழுப்புகிறார்கள். வேத சாஸ்திர தத்வங்களை அந்த நெறியிலேயே நின்றவர்கள், தக்க அறநெறியுடன் போதிப்பார்களானால், முறையே சிரத்தையுடன் கற்பிக்கப்பட்ட மாணவர்களும் மானவர்களும் வேத சாஸ்திர வாக்யங்கட்கு அபார்த்தம் செய்யமாட்டார்கள். ஏனெனில், பிரவ்ருத்திமார்க்க வாக்யங்களிற் பலவற்றை நிவ்ருத்திமார்க்க வாக்யங்கள், அதிகாரிபேதத்தை யனுசரித்துக், கண்டித்துச் செல்கின்றன. நமது பிராசீன மேதாவிகளால் தக்க யுக்திகளுடன் அந்தப்படியான வேத சாஸ்திர வாக்யங்களெல்லாம் விசாரிக்கப் பெற்றிருக்கின்றன. அந்த யுக்திகளில் முறையே பழகி வரும்போது யாதும் முரண்பாடு தோன்றாது. நமது பூர்வாசார்யர்களும் ஆத்ம தத்வமுணர்ந்த மேல்நாட்டாரிற் சிலரும், ''ஹிந்துமதத்தை ஒரு முடிந்த கருத்துகளடங்கிய மதமென்றும் எவருடைய ஆக்ஷேபங்கட்கும் அநுபவத்துக்கும்

தருந்த ஸமாதானம் சொல்லும் மதமென்றும் எல்லாமதங்களுக்கும் முக்யமான கொள்கையை யளிக்கமதமென்றும் "கொண்டிருக்கிறார்கள்." உலகஇன்பங்களை அநுபவிக்க அநுபவிக்க யாருக்கும் திருப்தியைத் தராமல் துன்பங்களையே முற்றும் தந்துகொண்டுவருவதால், இவைகளையறிந்த ஆத்மவுணர்ச்சி யுடையானொருவன், என்றும் நிலைதிரியாத இன்பமொன்றினைப் பெறுவதற்குரிய மார்க்கங்களை இந்துமதந்தான் போதிக்கின்றது." என்றும் பெரியோர் சொல்லியிருக்கின்றார்கள்.

இப்படி மதவிரோதிகளும் பயின்று நற்கதி பெறுவதற்குத் தக்க மதக்கொள்கைகளைச்செவ்வனே எடுத்துப்புகட்டும் இந்தவிந்து மதமானது, நம்மவர்க்குப் புகட்டாததற்குக் காரணமென்னவென்று ஆலோசித்தால், அது, அவர்க்கு அந்தக்கொள்கைகளை முறைப்படி நல்லநெறியுடன் போதிக்காதிருந்ததேதான் என்று நன்றாய் ஊகிக்க இடமாகின்றது.

ஆகையினால், "நமது பாடசாலைகளில், கற்பிக்கும் முறையில் இந்துமதக் கொள்கைகளும் ஒருபாகமாக வைக்கப்பெற்றுப் போதிக்கப்பெறல் வேண்டும்." என்பதே நமது முக்ய வேண்டுகோளாகும்.

பத்திராதிபர்.

தமிழ்ப்புலவர் சரித்திர முகவுரை.

தமிழ்ப்புலவர் சரித்திரம் என்பது பண்டைக்காலத்து அறிஞர்களது சரித்திரம் எனப் பொருள்படும். நவமாயியற்றப் பெற்ற தமிழ்ப்புலவர் சரித்திரம் என்னும் நூலின் ஒருபாகம், அதனை இயற்றிய எனது தமிழாசிரியர் சுன்னாகம்:- ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவரவர்களால், எனக்கு அனுப்பப்பட்டது. அப்போது யான் காரைக்குடியில் தமிழ்ப்பண்டிதனாக இருந்தேன். அநுப்பிய பாகமாவது எனது குலமுதல்வரும், சிவராத்திரிபுராணம் ஏகாதசிப் புராணம் கிள்ளைவிடுதூது முதலியவைகளின் ஆசிரியரும் ஆகிய வரதகவிப்புலமை வரதபண்டிதரவர்கள் சரித்திரம் வரைந்துள்ள பாகமாகும். அப்பாகத்தை யான் பார்த்து மகிழ்ச்சியினாலே சிறப்புப்பாயிரமுஞ்செய்தேன். அஃது சில தடைகளினாலே வெளிவந்திலதுபோலும். இப்போது, சரித்திர முகவுரையாகிய உபக்கிரமணிகையை வாசித்துப் பார்த்தேன். அதிலே "தமிழ்" எனும் பத அர்த்தம், அதன் வகை, "புலவர்" என்னுஞ் சொற்பொருள்,

அவர்வகை நூதனப்பாவும் பிறவும் சேர்த்தெழுதப்பட்டிருக்கின்றன. அன்றியும், இராமநாதபுரம் ஸ்ரீமாந் இராஜராஜேஸ்வர சேதுபதி அரசர் அவர்களும் வேறு சில தமிழ்ப்பிரபுக்களும், திரவியசகாயஞ் செய்து அபிமானித்தமையும் எழுதப்பட்டிருக்கிறது. மஹாராஜா அவர்களின் நாமத்தை விசேஷித்து முதற்பக்கமும், அவர்களுடைய உதாரகுணத்தை விசேஷித்து வேறு மூன்று பக்கங்களும் அதிக சாதுரியமாகப் பல வாக்கியங்கள் மாதுரியம் பொருந்த எழுதப்பட்டிருக்கின்றன.

நூலிலே ஏறக்குறைய நூற்றைம்பது புலவர்களுடைய சரித்திரங்களும், சிலசில கவிகளும் சிலசில அருங்கவிகளின் அர்த்தங்களும் வரையப்பட்டிருக்கின்றன. இன்னும், சேர்க்கப்படவேண்டிய புலவர்களாய் யாழ்ப்பாணத்திலே பலருளரென்று காண அறிகிறேன். அவர்களையும் அநுபந்தமாகச் சேர்த்துக்கொள்வது அதிகம் நல்லதென்று நான் கருதுகின்றேன். எனது மாதாமகரும், காரை: இயற்றமிழ்ப் போதகாசிரியரும், பிரபலபுலவருமாகிய மு. கார்த்திகேசஐயரவர்கள் சேர்க்கப்பட்டில. அவர்களோ தன்னையமகவந்தாதி, திக்கைக் கிரிபாதாதி முதலிய பிரபந்தங்கள் பாடினவர்கள்; பலநூல்களைப் பரிசீலனை செய்து அச்சிட்டவர்கள்; பண்டிதராகியிருந்த சிவசிதம்பரையரவர்களுக்குத் தந்தையார்; பற்பல பெரிய இரட்டையாசிரிய விருத்தங்கள் பாடிப் பத்திரிகைகளிலே பிரசுரித்தவர்கள். மிக்க வித்வாம்சராகிய புலோலி நா. கதிரைவேற்பிள்ளை அவர்களையும் சேர்க்கவில்லை என்று சிலர் கூறுகின்றார்கள். இன்னும் சில புலவர்களைப் பின்னர்க்கூறுவன்.

இன்னும், இந்நூல் புலவர்கள்சரித்திரங்களைப் பூரணமாகக் கொண்டிராததாயினும், தமிழ் நூல்களைப் படிப்பவர்களுக்கும் தமிழுபாத்தியாயர்களுக்கும், படித்துச் சிலசில விஷயங்களை அறிந்து கொள்ளுதற்கு, உபயோகமாகுமென்று நான் எண்ணுகிறேன். புலவர்சிரோமணியவர்கள் தமிழுலகத்தார்க்கும் எனக்கும் புரிந்த நன்மைகள் பல. அவையிற்றை ஈண்டுக்குறிக்க இடமின்றெனக் கருதி விடுகின்றேன்.

புலவரவர்கள் நீடூழிகாலம்—பூமியில்வாழ்க.—சுபமஸ்து.

இங்ஙனம்

யாழ்ப்பாணம்	வ. மு. இரத்தினேசுவரையர்,
பிங்கள௵	தமிழ்ப்பண்டிதர்,
வைகாசி௴	விவேகாநந்தசபை,
௳ ௧௨	மாத்தளை.

ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தங்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய ஆச்சிரமங்களினின்று அவ்வவற்றிற் கோதிய தருமங்களின் வழுவா தொழுகுதல்.

வழக்காவது ஒரு பொருளைத் தனித்தனியே, என்னுடையது என்னுடையது என்றிருக்கப்பட்டவர்கள் அது காரணமாகத் தமக்குள் மாறுபாடு பூண்டு அப்பொருளைப் பற்றிச் செல்வது.

அவ்வாறு சொல்லுதற்குரிய வியவகார பதம் பதினெண் வகைப்படும். அவையாவன:—கடன் கோடல், உபநிதி, கூடிமேம்படல், கலகியதை நல்காமை, ஒப்பிப்பணி செய்யாமை, கூலி கொடாமை, உடையனல்லானவிற்றல், விற்றுக்கொடாமை, கொண்டுள்ளமொப்பாமை, கட்டுப்பாடு கடத்தல், நிலவழக்கு, மாதராடவர் தருமம், தாயபாகம், வன்செய்கை, சொற்கொடுமை, தண்டக்கொடுமை, சூது, ஒழிபு என இவைகளாம்.

தண்டமாவது மேற்சொல்லிய ஒழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழுவியவர்களை அவ்வந் நெறியில் நிறுத்தற் பொருட்டு ஒப்பநாடி அதற்குத் தக்கவாறு தண்டித்தல்.

இவைகளுள்ளும் வழக்கும் தண்டமும் உலகமார்க்கத்தை நிலை நிறுத்துதற்கு மட்டினும் உரியனவாயிருத்தலேயன்றி ஒழுக்கத்தைப் போல மக்களுயிர்க்கு உறுதிபயக்குஞ் சிறப்பினவாயில்லையாதலானும், நூல்களானும் அறியப்படுதல் மாத்திரையின் நில்லாது அறிவு மிகுதியினாலேயும் தேச நடக்கையினாலேயும் அறியக்கூடியனவாயிருத்தலானும், அவைகளை விலக்கி மக்களுயிர்க்கு உறுதிபயக்குஞ் சிறப்பினதாய் ஒழுக்கமே தருமமென வெடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிபாலனமென்பதற்கு முன்னரே பாதுகாவல் எனப்பொருள் கூறப்பட்டது. பொன் வெள்ளி இரத்தின முதலியவைகளையும் அவற்றானுய நகைகளையும் ஏனைய பதார்த்தங்களையும் காக்கும் காவல் போலாது, ஆத்மசுகத்திற்கு ஏதுவாய் இன்னின்னார்க்கு இன்

வின்னவை புரிந்தென மனுஸ்மிருதி முதலிய நூல்களிற் கூறப் பட்டுள்ளவைகளைக் கைக்கொண்டு இடைவிடாது அநுட்டித்து வருதலையே ஏற்புடைய பாதுகாவலெனக் கூறப்பட்டது.

இதுகாறும் தொடர்க்குப் பொருளும், தருமம் என்றால் இன்ன தென்பதும், பரிபாலனம் என்றால் இன்னதென்பதும் இவ்விதமென் பதுங் கூறப்பட்டன. இனித்தருமத்தின் வகைகளைப்பற்றியோசிக்க வேண்டுவது ஆவசியகம்.

அது தான் நான்குவகைப்பட்ட நிலையுடையதாய் வருணங்கள் தோறும் பலவேறுவகைப்பட்டுக் கிடக்கின்றமையாலும், ஒவ்வொன் றிற்கும் சிறப்பாயுள்ளமையாலும், தனித்தனி கூறப்புகின் விரியு மாதலாலும், விரிப்பினும் சிறுபான்மையோர்க்கே உபயோகப்படுத லாலும், எல்லார்க்கும் மொத்தலிற் பெரும்பான்மையாகிய பொது வியல்பு பற்றி இல்லறந் துறவறமென இரண்டுவகையாகப் பிரித் துக்கொண்டு கூறத்தொடங்குகின்றேன்.

இல்லறம்—இ-ள். கற்புடைமனைவியோடு இல்லின்கணிருந்து செய்யும்அறம் என்பதாம். இதினின்றும் இல்லறமென்பதற்கு இல் லின்கணிருந்து செய்யும்அறமெனப்பொருளிருக்க, "கற்புடைமனைவி யோடு" என்று அடைதந்து பொருள் கொள்வானேனென்ன ஓர் ஆசங் கை நிகழலாம். நம் தெய்வப்புலமைத்திருவள்ளுவநாயனார்,

"பெண்ணிற் பெருந்தக்கயாவுள கற்பென்னுந், திண்மையுண் டாகப்பெறின்" என்று கூறியிருத்தலும், இதனுள் "கற்பென்னும்" என விசேடித்து "யாவுள, என்றதற்கு நம்பரிமேலழகியார்" "கற்பு டையாள் போல அறமுதலிய மூன்றற்கும் ஏதுவாவன பிறவின் மையின் யாவுள வென்றார்" எனக் கூறியிருத்தலும், அவ்வாறு அடைதந்து பொருள கோடலே வற்புறுத்தலின் அங்ஙனம் கொள்ள வேண்டும். இன்னும்,

"கற்பு மேய கனங்குழை மாதரைப்
பெற்று ளோர்த மரபும் பெருந்தவக்
கற்பி னூட்கொண்ட காதல ருயிர்ச்
சுற்றம் யாவுந் துறக்கத்தி னெய்துமால்."

விவசாயம்

கலப்பைகளும் உழவும்.

நமது இராஜாங்கத்தில் ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டு வருகிறபடியால், அவர்கள் போஜனார்த்தத்திற்கும் தரிசநிலங்களைத் தற்காலத்தில் எடுத்துச் சாகுபடிக்குக் கொண்டுவரக் குடிகள் பிரயத்தனப்படுவது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே.

இதற்கு மூலகாரணம் யாதெனில்:— நமது ஆகாரம் உடை முதலிய உபயோகமுள்ள எல்லா வஸ்துக்களுக்கும், புற்பூண்டுகளைப் புசித்தும் புஷ்பங்களின் மதுவைப் பானம் செய்தும் நமக்குப் பால் தேன் முதலிய உணவுப்பொருள்களாக மாற்றிக்கொடுக்கிற ஜீவப் பிராணிகளுக்கும் ஜீவாதாரமாயிருப்பன இப்பயிர்ச்செடிகளே.

இப்பயிர்களின் வளர்ப்பானது வேளாண்மைத் திறத்தை ஒத்திருக்கிறது. உலகத்தில் வழங்கிவரும் "கொழுநன் நட்பில்லாத பெண்ணும் உழவு நட்பில்லாத பயிரும் பிரயோஜனமில்லை" என்றும், "உழஅற உழுதால் விளைவுஅற விளையும்" என்றும் உள்ள பழமொழிகள் மேற்சொன்ன கருத்தை வெளியாக்குகின்றன. அதாவது வேளாண்மை என்பது முட்களையும் புதர்களையும் அழித்து நிலத்தைத் திறமான கருவிகளைக்கொண்டு பக்குவப்படுத்தித் தகுந்த பயிர்களை காலத்தில் சாகுபடி செய்து அத்தொழிலுக்குச் சாதனங்களாயிருக்கும் ஜீவப்பிராணிகளையும் போஷித்துநிர்வகிப்பதுதான்.

எல்லாத்தொழில்களுக்கும் ஜீவாதாரமாயிருக்கும் இத்தொழிலின் குறைகளைத்தெரிந்து சீர்திருத்தி நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்து பலப்படுத்தவேண்டியது அவசியமல்லவா?

இந்நாட்டுக்கிருஷியை அபிவிருத்திசெய்யக்கூடுமான அநேக விஷயங்களில் முக்கிய பாகமாகிய வேளாண்மைக்குக் கருவிகளில்

தலைமையான கலப்பைகளையும் அவைகளினுடைய உழவின் குண விசேஷங்களைப்பற்றியும் நாம் இங்குப் பேசுவோம்.

இந்தசமஸ்தானத்தில் உபயோகித்து வருவதுபோல மற்றத் தேசங்களிலும் கொஞ்சக்காலத்திற்கு முன் மரக்கலப்பையையே உபயோகப்படுத்தி வந்தார்கள். ஆனால் அவ்விடங்களிலிருக்கும் குடிகள் காலநாகரீகத்தையொத்து விவசாய அபிவிர்த்தி சம்பந்தமான விஷயங்களில் தங்கள் தங்கள் இராஜாங்கத்தாரோடு தாங்களும் சிரத்தையெடுத்துக்கொண்டு ஆங்காங்குள்ள கலப்பைகளின் குறைகளை 'அறிந்து சிலமாறுதல்களைச் செய்துச் சீர்திருத்தி ஆழமாயும் ஜாஸ்தி மண் புறளும்படிக்கும் செய்து கொண்டார்கள். நமது சமஸ்தானத்துக் குடிகளோ விவசாய அபிவிருத்தியில் சிரத்தையில்லாததுடன் நம்பிக்கையும் ஊக்கமும் மனோதைரியமுமற்றவர்களாயிருப்பதால் நமது கலப்பைகள் மாறுதலன்றியில் பழையமாதிரியாகவே இருக்கிறது.

இவ்விடத்தில் மழைமாரிகள் சரியானகாலத்தில் பெய்யாமல் க்ஷாமமாய்ப் போகிறபடியால் நமது கருணைதங்கிய மஹா—ா—ா—ஸ்ரீ மகாராஜா அவர்கள் இதையறிந்து விவசாயிகளை நல்ல நிலைமைக்குக்கொண்டுவரும் பொருட்டும் நூதன விவசாய முறைமைகளின் குண விசேஷங்களைத் தெளிவாகச்சொல்லிக்குடிகளுக்கு ஊக்கத்தை உண்டுபண்ணி அவர்களை அநுஷ்டிக்கச்செய்து அதனால் அவர்கள் விசேஷ லாபத்தையடையும் நவீன சாஸ்திரமுறைகளில் தேர்ச்சியடைந்தவர்களை நியமித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

இது நிற்க, மற்றத்தேசங்களின் கலப்பைஅடைந்த மாறுதலின் அநுகூலங்களையே பேசுமுன் நமது கலப்பையின் உழவின் தோஷங்களைச்சற்று எடுத்துப்பேசுவோம். இந்தக்கலப்பை செய்ய ஆப்பு உருவம்போன்ற மரமும் அதன் நுனியில் சேர்க்க இரும்பு தட்டைக்கம்பி கொழுவும் தாம் அவசியமானவை. இக்கலப்பை அமைக்கப்பட்டிருக்கும் வாட்டத்தினால் இதன் உழவில் மண் இலே

சாக மேலே கிறப்பட்டு ஆழமில்லாமல் உழவுசால்களுக்கிடையில் திட்டுகளும் காணப்படுகின்றன. மண்ணைக் கீழும் மேனுமாய்ப் புரட்டிப் புற்பூண்டுகளின் வேர்களை வெளிப்படுத்திக்காயவைத்து அழிக்கவும் மண்ணை விதைக்கும் பக்குவத்திற்கு கொண்டு வரவும் சக்தியற்றதாயுமிருக்கிறது. தவிரவும் கலப்பையில் மண் ஒட்டிக்கொண்டு மாட்டுக்கும் ஏர் ஓட்டிக்கும் சிரமத்தைக்கொடுப்பதோடும் உழவு ஆழமாய்ச்செல்ல ஏர் ஓட்டி மேழியை எப்பொழுதும் அழுத்த வேண்டியதாயுமிருக்கிறது. இவ்வளவு அற்றைக்கூலி ஆளைக் கொண்டு உழுத நிலத்தை மண்ணைச்சற்று அப்புறப்படுத்தி உழவைப்பார்த்தால் படைச்சால்களுக்கு ஊடே நேரிடும் திட்டுகள் அதிகமாய்க் காணப்படும். இதன் காரணத்தை யோசிக்கும் பட்சத்தில், உழவில் ஏற்படும் படைச்சாலானது கலப்பையின் அமைப்பால் மேற்பக்கம் மண்ணில்போகும் அகலம் அடிப்பக்கமும் போகாமல் மேலேயிருந்து இருபக்கமும் வட்டமாய்க் கரைந்து முக்கோண உருவத்தைப்போலடைகிறது. இவைகளை நிவர்த்திக்கும்பொருட்டுத்தான் கிருஷிகர் குறுக்குழவு போடுவது சகஜம். பத்தாள் கடுகை குடித்தனமுள்ளவன் இவ்விடத்தில் உழவிற்கு ஒரு ஜோடி மாடு வைத்துக்கொள்வது வழக்கம். உழவிற்செல்லும்காலத்தைக் கவனித்தால் ஒரு ஏரைக்கொண்டு இவனுடைய நிலத்தை முதல் உழவு செய்ய 5 நாளும் மறுபடி குறுக்குழவிற்கு 3 நாளும் சாயிருந்த பட்சத்தில் செல்லும். இப்படிச்செய்துங்கூட உழவில் இன்னம்சிறிய சதுரமான திட்டுகள் காணப்படுகிறபடியால், மண்ணின் பாங்குக்குத் தகுந்தபடி 4 அல்லது 6 உழவு செய்யவேண்டியதாயிருக்கிறது. இவ்வளவு சிரமப்பட்டும் மண் வெட்டியினால கொத்துதலில் மண் புரட்டப்பட்டு நயமடைகிறது போல இதில அவ்வளவு பதமடைகிறதில்லை.

தவிர, நமது குடிகள் மழையை எதிர்பார்த்து விவசாயத் தொழிலை கைக்கொளவது வழக்கமல்ல. உதாரணமாக மழை பெய்த பிறகு தான் உழுவதற்காகக் கலப்பை அடிக்க ஆசாரியிடம் போவது வழக்கமாயிருக்கிறது. அவனோ குடியானவனுக்கு கால தாமதத்தால் உண்டாகும் நஷ்டத்தைக் கவனியாமல், தன்னுடைய

லாபத்தையே கருதி ஜாஸ்தி பணம் தரக்கூடிய இதரவேலைகளில் கருத்தாயும் குடியானவனைத் தன வீட்டுக்கு அலையவைத்தும் தன் தயவை எதிர்பார்த்துக் காத்திருக்கும்படிச் செய்வதையும் கண்டு முதல் காலத்தில் இவ்வளவு தயவாய்ச்செய்து கொடுத்த வேலைக்கு சூடாம காலத்திலும் தானியம் வாங்குவதையும் அநேகர் பார்த்தும் கேட்டுமிருக்கலாம்,

இவ்விதகாரணங்களை முன்னிட்டும் மழை காலாகாலத்தில் தவறுகிறபடியாலும் குடியானவனுக்கு நிலத்தை நன்றாய்ச்செம்மை படுத்த ஆசையிருந்தாலும்கூட பட்டத்துக்குள் நிலம் பூராவும் தருக்கபடி நயப்படுத்த சாகவாசம் இல்லாதிருப்பதில், அவசரத்தில் பூமியை அரைகுறையாய் உழுது விதைத்துக் கடைசியில கண்டு முதல் நாளில் அதிருப்தியடைகிறான். "ஓடி ஓடி ஆறு குழி உழுவதால் யாது பயன்" பயிரின் வேர்கள் சல்லிசாய் ஓடும்படி மண்ணை நன்றாய்க்கிளறி இளக்கியும் காற்றாடச்செய்தும் ஈரத்தை காக்கும்படி செய்வதும் உழவினால் ஆகவேண்டியதன்றோ? இவ்விஷயங்களை திருப்திகரமாய்ச்செய்ய நமது கலப்பை சக்தியற்றதாயிருந்தபடியால் மற்ற தேசங்களில சீர்திருத்தப்பட்டு இரும்பினால் செய்யப்பட்டதால் இரும்புக்கலப்பை யென்று பெயர்வழங்குகிறது.

கொத்துதலில் மண்வெட்டி எப்படி மண்ணைக் கீழும் மேலுமாய்ப் புரட்டப்படுவதற்குச் சாதனமாயிருக்கிறதோ அதுபோல இரும்புக்கலப்பையும் உழவில் அதன் கூர்மையான கொழுவின் சக்தியினால் மண்ணைப் பெயர்த்துக்கிளரி மண் புரட்டும் இறக்கையின் விசேஷவாட்ட அமைப்பால் இளகிற மண் மறைந்து விழுக அடி மண்ணை மேல் வரச்செய்து ஒருபுரமாய்ச் சால்களைப் புரட்டிச் சமகோணமான உருவத்தை அடையும் படைசசால்களில் விழுகும்படி செய்கிறது. ஒவ்வொரு தடவையும் இம்மாதிரிப் படைச்சால் ஏற்பட்டுக் கொழுவினால் கிளறப்படும் மண் கீழும் மேலுமாய் புரட்டப்பட்டு முன்னிருக்கும் படைச்சாலில் விழுந்து மறைகிறது. மண் புரட்டும் இறக்கையின் மேல்பாகம் மிருது ஏற்றப்பட்டு பளபளப்பாயிருக்கிறபடியால் நாட்டுக்கலப்பையில் போல் அதில் மண் ஒட்டிக்கொள்வதில்லை, காலதாமதமில்லாமலும் நிலம் பூராவும் ஒரு உழவில்

நன்றாகவுழப்பட்டு மண் விதைக்கும் பக்குவத்தையடைகிறது. இதில் படைச்சால்கள் ஆழமாய்ப் போவதற்கும் தணிந்த மாடுகள் பூட்டிக் கொள்வதற்கும் தகுந்த சாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சாதாரணமாய் இக்கலப்பை செல்லும் ஆழம் தானியப்பயிர்களுக்குப் போதுமானது. செடிகளின் வேர்களுக்குத் தகுந்தபடி மண்ணை இளக்கவேண்டியது அவசியமானதால், உழவின் ஆழம் சாகுபடிசெய்யும் பயிர்களின் தன்மையையும் மண்ணின் சுபாவத்தையும் ஒத்திருக்கிறது. இதை யோஜித்துக் கலப்பையை உபயோகிக்கும் போதே இன்னபயிர்தான் சாகுபடிசெய்வதென்று நிச்சயித்துக்கொள்வதோடும் மண்ணின் சுபாவத்திற்குத் தகுந்தபடியும் கலப்பையைக் கொண்டு உழ இக்கருவியின் அமைப்பிலிருக்கும் சாதனங்களை இதற்குத்தகுந்தபடியும் சரிப்படுத்திக்கொள்ளவேண்டியது. இப்படிச்செய்தால் ஏர்ஓட்டிக்குக்கலப்பையை அமிழ்த்தவேண்டிய சிரமமில்லை. ஆழ உழுவதால் மண் இளகிப் புலபுலத்துக் காற்று சூரிய வெப்பம் மழை முதலியவைகளால ஏராளமாய்ச் சஞ்சரிக்கப்பட்டு மண்ணிலிருக்கும் பயிர் சாதனங்களை உணவுப் பொருளாக மாற்றிப் பயிர்களுக்கு வீரியத்தையும் கொடுக்கிறது. இதனால் தான் "எருவினும் வலியது உழவு" "உழவு அறஉழுதால் விளைவு அறவிளையும்" என்னும் பழமொழிகள் வழங்குகிறது.

மழைபெய்யும் பொழுது உழுத வயலுக்கும் உழாத வயலுக்கும் இருக்கிற வித்தியாசத்தைப்பார்த்தால், உழுதவயலில மழை ஜலம் உறிஞ்சப்பட்டு மண் ஈரமேற்றுக்கொள்ளுகிறது. உழாத வயலில் மழை ஜலமானது பள்ளத்தாக்குகளை நோக்கிச்சென்று உபயோகமில்லாமற்போகிறது. ஆழ உழுவதால வேர்கள் ஆழமாய்ச் செல்ல வழியுண்டாகிக் காலத்தில் மழை தவறினாலும் காய்ச்சலைத் தாங்கும்படி பயிர்களுக்கு சக்தியுண்டாகிறது.

நாட்டுக் கலப்பையைக்கொண்டு ஒரு காலத்தில் எவ்வளவு நிலம் உழ முடியுமோ அதேகாலத்தில் அதைப்போல் மூன்று மடங்கு விஸ்தீரணமான நிலத்தை இக்கலப்பையினால் உழுது வேளாண்மை செய்யலாம். தவிரவும் புற்பூண்டுகளின் வேர்களை

வெளிப்படுத்தி மக்கவைத்து எருவாக்கிக்கொள்வதோடும் பூமியில் குடிகொண்டிருக்கும் பயிர்களுக்குக் கெடுதிசெய்யும் சிறு கிருமிகளையும் வெளிப்படுத்திப்பட்சிகளுக்கு ஆகாரமாக்கிப்பயிர் விருத்தியடையும்படி செய்கிறது. இக்குண விசேஷங்கள் அமைக்கப்பெற்ற இவ்விரும்புக்கலப்பையே சிலாக்கியமான கருவியென்று நாம் கருதவேண்டும்.

பல கம்பெனிகளில் உலகம் விருத்தியடைவதற்குத் தக்கபடி நமது நாட்டு மண்மாதிரி உழவுப் பழக்கங்கள் உயிர் வாழாநின்ற கால்நடைகளின் பலத்தை யோசித்தும் குடிகளின் தரித்திர நிலைமையை அனுசரித்தும் பற்பல கலப்பைகள் செய்து விற்பனை செய்கிறார்கள். இஞ்சின் இழுக்கும்படியான கலப்பைகளும், மண்கட்டிகளை உடைக்கும் கலப்பைகளும், சால்கள் உண்டுபண்ணி வரப்புகள் கட்டும் கலப்பைகளும் செய்திருக்கிறார்கள். மேற்சொல்லிய சீர்திருத்தங்களையடைந்த கலப்பைகளையும் நமது ஸமஸ்தானத்துக் குடிகளின் நிலைமையையும் மாடுகளின் ஸ்திதியையும்யோஜித்தால், விலைசரசமாயும் லகுவானதாயுமிருக்கும். "களைமாக்ஸ்" "மெஸ்டன்" "மன்ரூன்" என்று பெயர் வழங்கும் கலப்பைகள் ஏற்றவைகளாதலால் அவைகளின் முக்கிய அம்சங்களைப்பற்றி ஆராய்வோம்.

இவைகளின் முக்கிய பாகங்கள் இரும்பினாலும் ஏர்க்காலும் மேழியும் மரத்தினாலும் செய்யப்பட்டிருக்கின்றன. இரும்பினால் செய்யப்பட்ட பாகம் பல துண்டுகளை ஒன்றாய்ச் சேர்த்து கட்டையும் முறுக்காணியும் வைத்து முடிக்கப்பட்டிருக்கிறது. இத்துண்டுகளில், எந்தப் பாகம் கெடுதல் அடைந்தபோதிலும் சுலபமாய்த் தனியே எடுத்து புதிதான வேறு துண்டுகள் வைத்து சேர்த்துக் கொள்ளலாம். சாலைகளின் உயரத்திற்குத் தகுந்தபடி ஏர்க்காலை உயர்த்தவும் தாழ்த்தவும் சாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைப் புழுதி நிலங்களிலும், சேற்று நிலங்களிலும் உபயோகப்படுத்தலாம். கொழுவு தேய்ந்துபோகுமாதலால் அடிக்கடி மாற்றவேண்டியதற்குச் சொற்பச் செலவில் புதுக்கொழு தனி

யாய் வாங்கிக்கொள்ளலாம். மற்ற எல்லாப்பாகங்களும் ஜாக்கிரதை யாய் உபயோகப்படுத்தும் பட்சத்தில் அநேக வருஷங்கள் வரை கெடுதிபடையாமல் நிலைத்திருக்கும்.

நவீன சாஸ்திர விவசாய பழக்கங்களிலும் கிருஷி ஆயுதங்களி லும் இன்னும் சந்தேகிக்கும் விவசாயிகளுக்கு விசுவாசம் ஜனிப் பதற்காகத் திருமயம் தாலூகாவில் வெங்களூர், கோட்டூர் முதலிய கிராமங்களில் மேற்சொல்லிய "மெஸ்டன்" என்னும் கலப்பையை உழுது பரீக்ஷித்துக் குணங்களைத்தெரிந்து அநுபவிக்கும் நிலச் சுவான்தார்களின் ரிபோர்ட்டின் காப்பிகளின் சுருக்கம் இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஷை இரும்புக்கலப்பையின் உபயோகத்தால் அதிக நாள் சிரமமும் பொருள் விரயமும் உண்டாகாதென்றும் கால் நடைகளுக்குச் சிரமமில்லையென்பதும் தெளிவாகும்.

இது நாட்டுக் கலப்பையைக் காட்டிலும் முதலில் விலைக்கு வாங்க அதிகச் செலவுசெய்யவேண்டியதாயிருந்தபோதிலும் கூட ஆசாரிகளுக்குக்கலப்பைக்காக வருஷந்தோறும் கொடுக்கும் தானிய அளவின் விரயத்தை உத்தேசித்தும், காலத்தில் கலப்பை அடிப்ப தற்கு நேரிடுகிற தொந்தரவை உத்தேசித்தும், காலதாமதத்தா லுண்டாகும் நஷ்டத்தைபோக்கு மளவில் அநேக வருஷங்களுக்கு உபயோகப்படுத்தும் இவ்விரும்புக் கலப்பையை வாங்கிவருவது நல மென்று புலப்படும்.

இவ்வளவு குணகரமான கலப்பையை விவசாய உத்தியோ கஸ்தர் மூலமாய் அபேட்சித்தால் அவர்கள் மனுதாரின் சக்திக்குத் தகுந்தபடிக்கும் அவர்கள் நிலத்தின் மண்பாங்குக்குத் தகுந்தபடி யும் ஏற்ற உபயோகமுள்ள கலப்பையைத் தருவித்து அசலுக்குக் கொடுக்கத்தயாராயிருக்கிறார்கள்.

Tirumayyam, 7—3—17 } G. DORAISWAMI IYENGAR, Agricultural Instructor.

Extract.

A. திருமயம் தாலூகா கோனாப்பட்டு வட்டம் வெங்களூர் கிராமம் சைய்னுமுகம்மது வணக்கமாய் எழுதிக்கொண்ட மனு.

தாங்களும், இந்த வட்டம் மிராசுதாரர்கூடக் கொண்டுவந்த "மெஸ்டன்" கலப்பையை கிராயுள்ள நஞ்சை நிலத்தில் என்னுடைய ஏரைக்கொண்டு கட்டி உழுதுப் பார்த்ததில் உழவு திட்டு இல்லாமலும் ஆழமாயும் மாட்டுக்கு லகுவாயும் கஷ்டமில்லாமல் போவதோடும் கலப்பையின் இறக்கை மண்ணைக் கீழும் மேலுமாய் புரட்டித்தள்ளுவதைப் பார்க்க காலதாமதமில்லாமல் உழவடைசெய்வதற்குச் சிலாக்கியமாகக் காணப்படுகிறது. இந்தக் காரணத்தால் எனக்கு ஒருகலப்பை புதிதாகவும் நயமாகவும் வாட்டமாயுள்ளதாயும் தங்களிடமிருக்கும் கலப்பைகளில் பொருக்கிக்கொடுத்து உள்ள கிரயத்தை பெற்றுக்கொள்ளும்படியாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

22—11—16 (Sd.) சைய்னுமுகம்மது ராவுத்தர்.

B. கோட்டூர் வட்டம் கோட்டூர் கிராமம் தி. சொ. காரியம் கருப்பையாபிள்ளை எழுதிக்கொண்ட மனு.

தாங்கள் இவ்விடத்திற்குக் கொண்டுவந்த இரும்புக்கலப்பையால் நஞ்சை நிலத்தில் எங்கள் பண்ணை ஆளை உழச்சொன்னேன். அதாவது தாங்களுமிருக்கும்போது நேரில் கட்டி உழுதுபார்த்ததில்மாடு லகுவாயும் கஷ்டமில்லாமல் போவதோடும் கலப்பையில் தகடு மண்ணை புரட்டித்தள்ளுவதையும் பார்க்க ரொம்ப உழவடை செய்வதற்குச் சிலாக்கியமாகத்தெரிகிறது. ஆகையால், இதுசமயம் சாகுபடி சமயமாகையால் எங்களுக்கு 2 கலப்பை அவசியம்வேணும். தாங்கள் தயவுசெய்து வருகிற வெள்ளிக்கிழமை புதுக்கோட்டையில் தங்களிடமிருக்கும் கலப்பையில் நயமானதாய்ப் பொருக்கி அதன் கிரயத்தை எங்களிடம் பெற்றுக்கொண்டு கலப்பைகள் கொடுக்க உத்திரவாகவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

17—10—16. (Sd.) தி. சொ. காரியம் கருப்பையாபிள்ளை.

Tirumayyam,
7—3—17.

G. DORAISWAMI IYENGAR.
Agricultural Instructor.

தொண்டை மண்டல சதகம்

புதுவைச் சேதிராயன்

அழுவதுங் கொண்டு புலம்பாது நஞ்சுண்டதை மறைத்தே
செழுவதுங் கொண்டு புகழ்க்கம்ப நாட னெழுபதிசை
முழுவதுங் கொண்டொரு சொற்பேச நெய்யின் முழுகிக் (கையின்
மழுவதுங் கொண்டு புகழ்கொண்டதாற் றொண்டை மண்டல (மே.

பொழிப்புரை.

புதுவைச் சேதியராயனென்னும் செல்வரைப் பாம்புகடிக்க, அதனாலுண்டாகும் வருத்தத்தைப் புலம்பியழுது வெளிப் படுத்தாமல் மறைத்துக் கம்பரால் கவிபாடிப் பிழைத்து அவர் பாடி வந்த ஏரெழுபதென்னும் நூலை அரங்கேற்றி, அதனால் கீர்த்தி சிறந்து விளங்க, அரசன் அச்செயல் ஐயுறத்தக்கதென்று கூறியபோது, பழுக்கக் காய்ச்சிய நெய்யில் முழுகிக் கையில் மழுவையு மேந்தி ஐயந்தெளிவித்து அரசனாலும் புகழ்பெற்றோராகிய வேளாளருடையது தொண்டை மண்டலம்.

வரலாறு.

சேதிராயன் என்பவன் புதுவை என்னும் ஊருக்குத் தலைவனும் பிரபுவும் ஆவன். இவன் கொடையாலும் குணத்தாலும் புகழாலும் உயர்ந்து சிறந்த புலவர்க்குப் பேருபகாரியாகவும் விளங்கினவன். இவன் புதுவையர்கோன் சேதியர்கோன் என வழங்கும் பெருமை பெற்றுப் பிள்ளைப் பெருமாள் புதுவைச் சேதியராயன் என்னும் பெயர்களையு மேற்று மேம்பட வாழ்ந்தவன். அன்றியும், கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரால் பாடப் பெற்ற இராமாயணம் என்னும் இதிகாசத்தில் புகழ்ந்து பாடப் பெற்றுக் கொண்டவள்ள

லர்ச் சிறந்த திருவெண்ணெய் நல்லூர்ச் சடையற்கு மகனுமாய் விளங்கினனென்றால், இவனது பெருமை அளவிடற்பாலதோ? இவர் வெண்ணெய்ச் சடையற்கு மகனென்பது, "புதுவைவாழ் சடையனுதவுசேய்—பூதலம்பரவு சேதிபன்"

காவிரியைச் சோணாட்டைக் காராளர் தம்மரபை
நாவலரைக் காவலரை நல்லோரைப்—பூவலய
முள்ளத் தகும்புதுவை யூரைச் சிறப்பித்தான்
பிள்ளைப் பெருமாள் பிறந்து.

பேரோசைப் பிள்ளைப் பெருமாளைச் சேதியனைக்
காரோசைக் கையானைக் கண்டீரோ—பாரோர்
விடுங்கோள் கொடுங்கோ (ள்) விழிபருள் பூண்டன்ன
பிடுங்கோள் கொடுங் கே ... ...

எனவரும் மூவலூர்ச் சிவன்கோயிலிற் காணப்படும் சிலா சாஸனப் பாடல்களால் தெளிவாம்.

மேற்கூறியவற்றால், சேதிபன் அல்லது சேதிராயன் என்பவன் வெண்ணெய்ச்சடையற்கு மகனாயும் வள்ளலாயும் விளங்கினவனென்றும், இவனே கம்பர் ஏரெழுபது அரங்கேற்றும் போது விடந்தீண்டப்பட்டு அப்புலவர் பெருமானால் அது நீக்கப்பெற்றவனென்றும், இவன் தந்தையாகிய சடையற்கு வழங்கிய புதுவையர்கோன், சேதிபர்கோன் என்னும் விசேடணங்கள் இவன்றனக்கும் முறைப்படி எய்தின வென்றும், இவனுக்குப் பிள்ளைப்பெருமாள் என்பது பெயரென்றும், புதுவைச் சேதிராயன் என்றும் பெயர்வழக்கைப் பிரபலமாகப் பெற்றவன் என்றும் நன்குணரப்படுவன.

கல்வியிற் பெரிய கம்பரால் வேளாளரைச் சிறப்பித்துப்பாடிய ஏரெழுபது என்னும் நூலை அரங்கேற்றக் கூடியிருந்த அவையில்,வெண்ணெய்ச் சடையன்முதலிய வேளாளச்

செல்வருடன் இச்சேதிராயனும் ஒருவனாக விருந்து கேட்கும்போது, இவனை நாகமொன்று கடிக்க, இச்செய்தியைச் சபைக்கு அறிவிக்காமலேயிருந்து, ஏரெழுபது கேட்டபடியேவிஷந்தலைக்கேறி விழ்ந்தனன். அவ்வளவில் அங்குக் கூடிய பெரியோர் பலரும், உடற்குறியால் விடமென்று கண்டு வருந்தா நிற்கையில், கம்பர் தம் அருமைத்திருவாக்கால்,

* "ஆழியான் பள்ளி யணையே யவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே—† பூழியான்
பூணே புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற
நாணே யகல நட" (தமிழ் நாவலர் சரிதை.)

"மங்கை யொருபாகர் மார்பிலணி யாரமே
பொங்கு கடல்கடைந்த பொற்கயிறே—திங்களையுஞ்
சீறியதன் மேலூருந் தெய்வத் திருநாணே
யேறிய பண்பே யிறங்கு"

* இப்பாடல்கள் தில்லை மூவாயிரவர் பிள்ளைகளில் ஒன்றைஅரவுதீண்ட, அதனை உயிர்ப்பிக்கக் கம்பர் பாடியதாக விநோதரசமஞ்சரி முதலிய நூல்களின் காணப்படுகின்றன,

† பூழியான்—சிவ பெருமான்.

என்னும் இரண்டு வெண்பாக்கள்பாடித் தம் தெய்வசக்தியால் அவ்விஷத்தையிறக்கிச் சேதிராயனை உயிர்ப்பித்தனர். இது. "தமிழ் நாவலர் சரிதையில், கம்பர் ஏரெழுபதுபாடி அரங்கேற்றும்போது புதுவைச் சேதிராயனை விஷந்தீண்டத் தீர்த்தவெண்பா" என்று காணப்படும் குறிப்பும்,

குணங்கொள் சடையன் புதுச்சேரிக்கோடையன்சேதி ராயன்முதற்
கணங்கொள் பெரியோர் பலர்கூடிக் கம்பநாடன் களிகூர
விணக்கும் பரிசி லீந்தபுகழ் யேழும்புகழே ரெழுபதெனும்
மணங்கொள்பெருங்காப் பியப்பனுவல்வளஞ்சேர்சோழமண்டலமே.
(சோழமண்டலசதகம்.)

—பாவலர்தாம்

"ஏரெழுப தோதியரங் கேற்றுங் களரியிலே
காரிவிட ராகன் கடிக்குங்கை" (திருக்கைவழக்கம்)

எனவரும் பாடல்களும் இச்சம்பவத்தை நன்கு வலியுறுத்தப் போதுமான ஆதாரங்களாக் காணப்படுகின்றன.

இனிமேற்குறித்த "அழுவதுங்கொண்டு" என்னுஞ் சதகச் செய்யுளில் மூன்றாம்படியில் நான்காஞ்சீரில், "ஒரு சொற்பேச நெய்யின் முழுகிக் கையின்—மழுவதுங் கொண்டு புகழ்கொண்டதாற் றொண்டை மண்டலமே" எனவரும் அடிகளில் குறிக்கப்பட்டுள்ள சம்பவம் என்னவென்பதைக் கவனிப்பாம். வேளாண்மரபையும் அவர்தஞ் சிறப்பையும் பற்றி அரசசபையில் ஓர்பிரஸ்தாபம் நிகழ்ந்தபோது, வேளாண்மரபே சிறந்ததும் பாடல் பெறுவதற்குத் தகுதிபெற்றது மென்பதற்குக் கம்பர் வேளாளரைச் சிறப்பித்துப் பாடிய ஏரெழுபதே தக்க சான்றுமென்றும், அம்மரபின் வந்தானொருவன் எடுத்துக்கூற, அரசன் வேளாளர் அவ்வளவு சிறப்புடையரென்று பாடல் பெறத்தக்கவரோ? அக்கம்பர் சொல் மெய்யாமோ? என்று சங்கிக்கையில், அவ்வேளாண் மகன் அரசனைநோக்கி, கம்பர் வாக்குத் தெய்வீகமும் சத்தியமுமுடையது; அதனை நானே மெய்ப்பிக்க வுடையேன், என்றுக் காய்ச்சிய நெய்யில் மூழ்கியெழுந்து கையிலும் மழுவையேந்தி நின்று அரசன்கொண்ட ஐயத்தை நிவர்த்தித்து, அவ்வரசனால் தான்புகழப் பெற்றதன்றிக் கம்பரையும் அவர் பாடல்பெற்ற வேளாளரையும் புகழ்ந்து கொண்டாடச் செய்தான் என்பதே அவ்வடிகளின் வரலாறென்ப.

இங்ஙனம்
சி. கு. நாராயணசாமி முதலியார்
கோயமுத்தூர்.

மூடரும் முனிவனும்.

ஓரூரி லேபதின்மர் ஒன்றாக உற்றனராய்
வேறூராய்ச் சென்றே உலவிவரப்—பேருவகை
கொண்டார்கள் கொண்ட குறிப்பின் படிநடந்தே
கண்டாரோர் ஆற்றங் கரை. (1)

ஆற்றங் கரைகண்ட அன்னார்கள் அக்கரைசேர்
மாற்றம் அவணிலதால் மாழ்கினராய்ச்—சாற்றினர்கள்
பாலம்ஏதும் ஈங்கில்லை பார்த்ததுராம் இல்லைமுனம்
ஏலஇவன் செய்வதெவன் என்று. (மாற்றம்-வழி.) (2)

என்றேங்கி ஆங்கண் இருக்க எதிர்கரையில்
நின்றும் ஒருவன்அந் நீள்புனலில்—நன்றாக
வந்தடைந்தான் இக்கரையில் மற்றதனைப் பார்த்தோரும்
சந்தோஷ மேயடைந்தார் தாம். (3)

தாமகிழ்ச்சி கொண்டதினால் சாற்றுவர்கள் தாமதமேன்
நாமடையச் செல்வம் நடவுமெனச்—சேமமாய்
அக்கரைபோய் நின்றார் அதுபோ தவரிடையோர்
துக்கம்வந் துற்ற தொடர்ந்து. (4)

தொடர்ந்ததுயர் யாதென்னச் சொல்லிடுவன் கேளீர்
நடந்துகரை ஏறியபின் நாடிக்—கடந்துநதி
வந்தோமே எல்லோரும் வந்தோமோ என்றெண்ணிச்
சிந்தைஅழி வுற்றார் திகைத்து. (5)

திகைத்தமன முடையார் செப்புங்கால் தம்மையல்லால்
மிகையாயுள் ளார்கணக்கே விண்ட—வகையாலே
ஒன்பதென வேகணக்கிட் டார்கள் ஒருவருமே
தன்னொடுபத் தென்றறியார் தான். (6)

தானல்லா தேளவரும் சாற்றியபோ லேகணைக்கிட்
டானபெருக் காடாம் ஆ! ஆ! ஆ!—கானவிலும்
தாத்சுதன் றுகலினாற் றள்ளுகமற் றீதை
உறநோக்கி யுற்றமுனி ஓர்ந்து. (7)

ஓர்ந்தெய்தும் பேருவகை உள்ளடங் காதெழும்பிப்
பேர்ந்து வழிகுவபோல் யேசுமவர்—தேர்ந்திடவே
ஓர்சிரிப்புக் கொண்டார் உறுஞ்சிரிப்பை நோக்கியவர்
சார்படைந்து நின்றார்கள் தாழ்ந்து. (8)

தாழ்ந்து முனர்நின்றோர் தமைநோக்கிச் சாதுவுமே
ஆழ்ந்தமதி யுள்ளீர்காள் ஆகியதென்—போழ்ந்ததுயர்
சிந்தை அடைந்தீர்கள் தீர்ப்பனுரைப் பீர்எனலும்
அந்தம் வரையுரைத்தார் ஆய்ந்து. (9)

ஆய்ந்துரைத்த பின்னும் அடங்காத் துயரினராய்
மாய்ந்தான் ஒருவனெனும் மாண்பினராய்—ஏய்ந்தமுனி
முன்னரே தான்காண மும்மடங் குக்கதிகம்
அன்னர் புரண்டார் அழுது. (10)

அழுதேங்கு மன்னர்க் கருள் சேர்முனியும்
பழுதில்லை என்றே பகர்ந்து—முழுமூடர்
கூட்டத்தில் ஒன்றும் குறைவிலதாய்க் காட்டவே
வாட்டமற் றேஇருந்தார் வாழ்ந்து. (11)

வாழ்ந்தோம் குறைவில்லை மாசறுநன் மாமுனியே
தாழ்ந்தோர்பா லேசிரித்த தன்மையினை—ஆழ்ந்தமதி
இல்லோர்கள் தேறோம் எமக்கருள்செய் வீரென்ன
எல்லோரும் தாழ்ந்தார் இசைத்து. (12)

இசைத்தாரை நோக்கி எழுமினெனச் சொல்லி
அசைத்துக் கைகாட்டி அறிவோன்—வசைக்காக
அல்லவே நோக்கி அதுபொழுது லேசிரித்தேன்
சொல்லுவன்நான் கேளீர் தொகுத்து. (13)

தோருத்துச் சொலும்செய்தி தோன்றும் உலகில்
பகுத்தறிவு கொண்டதினால் பார்த்து—வகுக்கரிது
தன்நினைப்பே எவ்விடத்தும் தாராள மாயிருக்கத்
தன்நினைப்பே விட்டவர் தவிர்த்து. (14)

தவித்திட்ட தன்மை தனக்குச் சிரித்தேதன்
அவித்ததுயர் என்னும் அடையீர்—செவித்துளையில்
சேர்மாற்றம் நன்றாகச் சிந்திப்பீர் என்றுரைத்தான்
ஓர்மாற்றம் தேர்ந்திருந்தார் உற்று. (15)

உற்றபொருள் தேரின் உறும்பெருமை இன்னதென
மற்றெவரே யுரைப்பார் மாநிலத்தில்—குற்றமுள
பாகம் தவிர்த்துப் பயன்கொள்ள வேண்டுகின்றேன்
ஆகசுபம் எல்லோர்க்கும் ஆம். (1')

A. R. ஸ்ரீநிவாசமுதலியார்,
ஆரணமலை.

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீபெரியநாயகீ சமேத ஸ்ரீ பாடலேசுவரர் மஹா கும்பாபிஷேகம்.

நிகழும் பிங்கள வருஷம் ஆனி மீ கஉ குருவாரம் (28-6-17) ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 11¾க்கு மேல் 13க்குள் ஸிம்மலக்கினத்தில் ஸ்ரீபாடலேசுவரஸ்வாமிக்கும் ஸ்ரீபிரஹந் நாயகிக்கும் ஸ்ரீ விநாயகாதி சமஸ்த பரிவார தேவதைகளுக்கும் திருவருளை முன்னிட்டு மஹாகும்பாபிஷேகம் செய்விக்க நிச்சயித்திருப்பதால், அன்பர்கள் யாவரும் வந்து தரிசித்து நேத்திரானந்தமடைந்து அபீஷ்டங்களைப் பெற்று மகிழ்ந்துய்யும் வண்ணம் வேண்டுகின்றனம்.

திருப்பாதிரிப்புலியூர்,
பிங்கள-வரு சித்திரை-மீ
கஅ-உ

தீ. நா. நாச்சியப்பசெட்டி.
தீ. சோ. முருகப்பசெட்டி.
தீ. அ. சிதம்பரம்செட்டி.

அதிசய விஷயங்கள்.

ஒரு கல்லானகாடு,—அரிஸோனாவில் நூறுமைல் சதுரப் பரப்புள்ள ஒருகாடு இருக்கிறது. அங்கே அநேகம் பறவைகள் மரம் போன்ற உருவத்தோடும், மஞ்சள் நீலம் கருப்பு சிவப்பு ஊதா வெள்ளை முதலிய நிறங்களோடும் காணப்படுகின்றனவாம்.

எரிமலை:—உலகத்தில் 672 எரிமலைகள் இருக்கின்றன. அவற்றுள் 270 மலைகள் தாம் நெருப்பைக் கக்குகின்றன.

ஒரு விக்ரஹம்:—இங்கிலாந்தில் கார்ன் ஹில் என்னுமிடத்தில் மெஸ்ஸர்ஸ் ஹென்றி H. கிங் அண்டு கம்பெனியில், 1700 வருஷங்கட்குமுன் செய்யப்பட்ட ஹிந்துவிக்ரஹமொன்று விலைக்கு வந்திருக்கிறதாம். மொகலாயர்கள் இந்துராஜர்களை ஜயித்த போது அபஹரிக்கப்பட்டு 664 வருஷங்கள் அவர் வசமாக இருந்து, சிப்பாய்கலகத்துக்குப் பிறகு ஆங்கிலேயர்வசப்பட்டிருந்ததாம். பிறகு இந்தக்கம்பெனிக்கு கொண்டுவரப்பட்டதாம்.

புஸ்தகங்கள்:—ஜர்மனி ஒரு வருஷத்தில் சுமார் 20000 புஸ்தகங்களும், பிரான்சு 11000 புஸ்தகங்களும், இதாலி 9000 புஸ்தகங்களும், இங்கிலாந்து 6000 புஸ்தகங்களும், யுனைடெட் மாகாணம் 5000 புஸ்தகங்களும் வெளிப்படுத்துகின்றனவாம்.

செவ்வாய்:—இந்த க்ரஹத்தில் ஜனங்கள் வசிப்பதாகவும், அந்த ஜனங்கள் இந்தப் பூமிக்குச் சமாசாரம் போக்குவரவுசெய்ய முயற்சிப்பதாகவும், அதற்கு மின்சார உதவியால் வெளிச்சம் காண்பிப்பதாகவும், அத்தகைய வெளிச்சத்தை தான் அடிக்கடி தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் ஒரு பேர்போன பிரஞ்சு வானசாஸ்திரி சொல்லுகிறார்.

184 பக்கம் தொடர்ச்சி.

என்ற பெரியோர் கூற்றும் கற்புடை மனையாள் பெருமையை அறிக. கற்புடைமையாலன்றோ சிலபெண்மணிகள் புகழுடம்பு பெற்று இன்றும் நின்று நிலவுகின்றனர்.

இனி இல்லறத்தான் மேற்கொள்ள வேண்டுங் கருமங்களைப் பற்றி யோசிப்பாம்.

அவையாவன:—தன்னை யொழிந்த பிரமசரியம் வானப்பிரஸ்தம் சந்நியாசம் முதலிய மூன்று ஆசிரமங்களிலும் ஒழுகுகின்றவர்களுக்கும், மிக்க வறுமையை அடைந்தவர்களுக்கும், தம்மைப் பாதுகாப்பார் ஒருவருமின்றித் தங்கண் வந்து யாசித்தவர்களுக்கும், தேவர்க்கும், முனிவர்க்கும் விருந்தினர்க்கும், சுற்றத்தார்க்கும். பிறர்க்கும் வேண்டிய உதவிகளைச் செய்தலும் யாகாதி கிரியைகள் செய்தலும் விரதங்களை யநுட்டித்தலும் உயிர்களிடத்து அன்பும் அருளுமுடையனா யிருத்தலும் இன்னும் இவைபோன்ற பிறவுமாம்.

இவற்றிற்குச் சான்றாக நம் பொய்யில் புலமைத் திருவள்ளுவ நாயனார் கூறியுள்ள,

"இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை"
"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை"
"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை."

என்ற அருமைத் திருக்குறள்களையும் யோசித்தறிக.

மேலும் இத்தகைய காரியங்களுக் கெல்லாம் உடனிருந்துதவுபவளாகிய மனைவியை நற்குல நற்குணமுள்ளவளாகத் தேடிக்கொள்ளவேண்டும். பழியொழிந்த வழியிற் பொருளைச் சம்பாதித்தல் வேண்டும். வேதத்திலும் தரும சாஸ்திரத்திலுஞ் சொல்லப்பட்ட நித்திய நைமித்திக காரியங்களை வழுவின்றிச் செய்தல் வேண்டும். சப்தாதி விஷயங்களில் மிக்கவிருப்பம் வைத்தல்கூடாது. தன் மனையாளாயினும் சாஸ்திர விரோதமான காமசேஷ்டைகளை அயலிடத்திற் செய்தல் கூடாது. நகத்தைக் கிள்ளல் கூடாது. மண்கட்டியைக் காரணமின்றி உடைத்தல் கூடாது. (இவையெல்

லாம் தருமசாத்திரக் கூற்றெனவறிக) இவையாவும் தனித்தனி யொவ்வொரு தருமமாய் முடிந்து அதனுள்ளும் பல வேறுவகைப்படுவனவாயிருக்க, இவ்வனைத்தையும் தன்னுளடக்கிக் கொண்டிருக்கின்ற இவ்வில்லறத்தின் பெருமையை என்னென்றுரைப்பது?

இக்காலத்துச் சிலர் என்ன இல்லறம் வேண்டியிருக்கிறது? பெண்டிராம் பிள்ளையாம் இவர்களைக் காப்பாற்ற வேண்டுமாம். இதற்காக எவ்வளவு தான் சங்கடப்படுகிறது? அன்றியும் விடிந்தால் உப்பில்லை புளியில்லையென மனைவியொருபக்கம் துன்புறுத்துகிறாள். பிள்ளைகளோ எங்களுக்கு அதைவாங்கிக்கொடு இதைவாங்கிக்கொடு எனத்துன்புறுத்துகின்றன. இவைகளை நோக்கும்பொழுது இல்லறத்தில் வெகு துன்பங்களிருக்கின்றன என்கிறார்கள்.

துன்பமென்பது எதனிடத்துத்தான் இல்லாமலிருக்கிறது? யாண்டுந் துன்பமும் இன்பமும் ஒத்து நிகழ்வனவன்றோ? அங்ஙனமாக ஒன்றைமட்டிலும் நோக்குவதிற் பயனென்ன? இரண்டையும் ஒத்து நோக்குவதல்லவோ அறிவுடையோர்க் கழகாவது. இவை பற்றியன்றே கம்பநாடர், துன்புளதெனினன்றோ சுகமுளதுவன்றி" என்றும், திருத்தக்கதேவர், "துன்பமுற்றவர்க் கலாலின்பமில்லை யாதலின்" என்றுங் கூறியுள்ளார்கள். ஒத்துநோக்குவோமாயின், இதனிடத்தும் இன்பமும் பயனும் அளவிறந்திருக்கின்றன வன்றோ? எத்துணை யானமாக்களைத் திருப்திபண்ணி வைத்தற் கேதுவாயுள்ளது? இவ்வாறு இன்பதுன்ப மிரண்டையும் தானனுபவித் தறிவானன்றோ, பிறவுயிர்களின் இன்பதுன்பங்களை அறிவான்? தன்னனுபவத்தோடொட்டிப் பிறவுயிர்களின் இன்பதுன்பங்களை அறிவாற்கன்றோ அன்பும் அருளும் உண்டாம்? அன்பும் அருளும் உண்டாயினன்றோ பின்வருந் துறவறநிலைக் கேதுவாம்? இக்கருத்துப் பற்றியன்றே கந்தபுராண நூலாரும்,

"தருமமே போற்றிடி னன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழவியு மணையு மாங்கவை
வருவழித் தவமெனு மாட்சி யெய்துமேற்
றெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேருமால்."

எனக்கூறியுள்ளார்.

(தொடரும்)

S. ஆழ்வாரையங்கார்.
க. வி. கலாசாலை. தேசநதி,

நாட்டரசன் கோட்டை

வித்யாபரிபாலன சங்கத்தின்

ஆரம்பக்கொண்டாட்டம்.

4—5—17

இந்தச் சங்கத்திற்கு, அக்கிராஸநாதிபதியாகக் கோரப்பட்டுள்ள மகிபாலன்பட்டி, தமிழ் ஸம்ஸ்க்ருத வித்வான் ஸ்ரீமான் மு. கதிரேசச்செட்டியார் அவர்களை அவர்கள் இறங்கியிருந்த ஜாகையிலிருந்து மேளவாத்தியங்களுடன் நகரத்தார் ஸபைக்கு அழைத்துக்கொண்டு வந்தார்கள்.

சபையின் காரியதரிசியவர்களால் வரவேற்புப்பத்திரிகை படிக்கப்பெற்றுச் சபை மங்களகரமாக ஆரம்பிக்கலாயிற்று. அக்கிராஸநாதிபதியவர்கள் முகவுரையில் பின்வருமாறு பேசினார்கள்.

ஆண் பெண் இருபாலார்க்கும் கல்வியை இலவசமாகவும் கட்டாயமாகவும் கற்பிக்கவேண்டுமென்றும், நகரவட்டகையில் எவ்விடங்களிலும் சபைகள் புஸ்தகசாலைகள் வாசகசாலைகள் ஸ்தாபிக்கவேண்டுமென்றும், நமது நாட்டின் தற்கால நிலைமையை அறிந்து பிள்ளைகட்கு இந்துதேச சரித்திரம் மதக்கல்வி கைத்தொழிற் கல்வி வியாபாரக்கல்வி முதலியவைகளைத் தாய்ப்பாஷையாகிய தமிழிலேயே சொல்லிக்கொடுக்க வேண்டுமென்றும் மிகவும் அழுத்தமாக எடுத்துச் சொன்னார்கள். மேலும் நாட்டரசன் கோட்டையில் இதுகாறும் யாதொரு பொதுச்சபையும் ஏற்படாமலிருந்தது ஒரு குறைவாகவே இருந்தது என்றும், அக்குறைவு இப்போது நகரத்தாரால் ஒருவாறு நீக்கப்பட்டதென்றும் எடுத்துச் சொன்னார்கள். பிறகு கற்றறிந்த உபந்யாஸகர்களால் அருமையான விஷயங்கள் பல உபந்யஸிக்கப்பெற்றன. அவற்றின் சாரம் பின்வரும்.

வைகாசி மீ 22௳ பிற்பகல்.

கோநகர்க் கற்பகவிநாயக கலாசாலைத் தமிழ்த் தலைமையுபாத்தியாயர் ப்ரம்மஸ்ரீ அ. கோபாலையர் அவர்கள் கலாசாலைகளும்

சபைகளும் என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு, புறக்கண்களைக் காட்டிலும் அகக்கண்ணே மேலானதென்றும், அகக்கண்ணைப் பயன் பெறச்செய்வது கல்வியே யென்றும், அக்கல்வியோடு கேட்டலும் அத்யாவச்யம் என்றும், அப்படிக் கேட்டலும் பெரியவர் கோஷ்டி யாலேதான் பயன் தருமென்றும், அதற்கு இதனைப்போன்ற சபை களே மிகுந்த ஆதாரமாக இருக்கின்றனவென்றும், ஆகையால் இந் நாட்டில் எங்கும் சபைகளும் கலாசாலைகளும் ஏற்பட்டு மாணவர்க் குக் கேட்டறகும் கற்றற்கும் தகுந்த ஸாதனத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்றும் காருகவும் திருத்தமாகவும் அழுத்த மாகவும் பேசிமுடித்தார்கள்.

பிறகு, மதுரை வித்வான், ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் திருவி சைப்பா என்னும் அரியவிஷயத்தை எடுத்துக்கொண்டு, எல்லாம் வல்ல இறைவனை சிவபெருமான் தொண்டர்க்கெளியனென்றும், அத்தொண்டர்களது தோத்திரத்திற்கே எப்போதும் கருணைபாலிப் பவனென்றும், அங்ஙனம் ஆன்றோராகிய சமய முரவர்களாலே பாடப்பெற்று இன்றும் நிலவுவதாய்த் தமிழ்வேதங்களாக இருப்பன தேவாரதிகளென்றும், அவற்றுள் ஒன்று திருவிசைப்பாவென்றும், அதனுள் எம்பெருமானது அருட்டிறம் மிகுதியாக ஓதப்பெற்றிருக் கின்றனவென்றும் விரித்து கூறி அப்பாக்களுள் அருமை யான சிலவற்றை எடுத்தோதி யருமையான உரையும் கூறிச் சபை யோரை சிவானந்தக்கடலில் குளித்துச் சிவாநுபூதி மணியைப் பெறும்படிச் செய்தார்கள்.

இவ்விரண்டு விஷயங்கட்கும் அக்கிராஸநாதிபதியவர்களால் முடிவுரை கூறப்பெற்று அன்றையக்கூட்டம் அழகாக முடிக்கப் பெற்றது.

வைகாசி மீ 23உ சாலை.

பலுவான்குடி, ஸ்ரீமான் ராம. கு. ராம. இராமசாமிசெட்டியார் அவர்கள், ஜீவகாருண்யம் என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு,

ஜீவகோடிகளிடத்தில் கருணைகொள்வதே ஒருவன் தனது ஆத்ம தர்மத்தில் ஏறிச்செல்வதற்குத் தகுதியான மார்க்கமென்றும், ஜீவகாருண்யமில்லாது ஒருவன் எத்தனைதான் ஜெபதபங்களைச் செய்துகொண்டிருந்தாலும் சிவபிரான் கருணைக்குரிமை ஆகமாட்டாரென்றும், ஜீவகாருண்யத்துடனிருந்து உயிர் வதைக்கு இடங்கொடாதிருந்தால் இகத்திலும் பரத்திலும் சுகமடையலாகுமென்றும், தாம் கொலைசெய்யாதிருப்பினும் புலாலுண்ணலை விரும்பினால், கொலையிற் பெரும் பகுதியான பாவம் இவரையே சேருமென்றும் அருமையாகவும் அநுபவமுறையாகவும் எடுத்துப் பேசினார்கள்.

பிறகு, கண்டனூர், ஸ்ரீமான் க. தெ. அரு. ராமநாதன்செட்டியார் அவர்கள், முயற்சி என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு, முயற்சியே சகல காரியத்தையும் முடிக்கவல்ல சித்த ஔஷதம் என்றும், முயற்சியில்லாமல் இகத்திலாவது பரத்திலாவது அதாவது தேக ஏற்றத்திலாவது ஆத்ம ஏற்றத்திலாவது முன்னேற முடியாதென்றும், ஏனெனின் ஊழின்படியே யாவும் முடிக்கப்படுகின்றனவென்றும், ஊழ் என்பது பூர்வவினையாதலின் அப்பூர்வ வினையும் நல்லனவாயின் இப்பிறப்பில் நற்பயனையும் தீவினையாயின் தீயபயனையுமே கொடுக்கின்றனவென்றும், ஆதலின் இப்பிறப்பிலேனும் நலவினையில் முயற்சி செய்தவரின் பின் பிறப்பு ஒருகால் நேர்ந்ததேனும் நல்லபயனையே தந்து நமக்கும் நல்லவர்க்கும் நாதனுக்கும் நன்மைசெய்து கொண்டவராக ஆவோமென்றும் யாவர் மனதிலும் அழுந்தும்படியாகவும் உருக்கமாகவும் பேசினார்கள்.

பின்னர் உள்ளூர் வித்வான் ப்ரம்மஸ்ரீ சீதாராமய்யங்கார் அவர்கள் சூதுவிரும்பேல் என்னும் ஒளவைப்பிராட்டியின் சூத்திரத்தை எடுத்துக்கொண்டு அதற்கு உரைசொல்வதாகிய ஒரு வ்யாஜத்தை வைத்துக்கொண்டு, சிறுபிள்ளைகளும் பெரியவரும் ஏழைகளும் தனவந்தரும் ஆகிய இவர்களில் அநேகர் இந்த வினையை வேடிக்கையாக விரும்பிப் பிறகு சர்வத்தையும் இழந்து மானமழிந்து திரிகிறார்கள் என்றும், முன்னர் தருமன் முதலானோர் கேடடைந்தது இந்தத் தீய வினையினாலே தானென்றும், இந்த வினைசெய்து கெடுவதை

விடக் காலத்தை வீண்போக்காமல் தூங்கவாகிலும் செய்யலாமே என்றும் ஹாஸ்யரஸம் தோன்றவும் ஒவ்வொருவர் மனத்திலும் தைக்கும்படிக்கும் அத்தொழிலுடையார் மனம் வருந்தி அன்று முதலே அதனை நிவர்த்திசெய்யும்படிக்கும் பேசிமுடித்தார்கள்.

பிறகு, திருவாரூர் தமிழ் வித்வான் ப்ரம்மஸ்ரீ சிதம்பரையர் அவர்கள், திருவிளையாடல் ஆராய்ச்சி என்னும் ஒரு அரிய விஷயத்தை எடுத்துக்கொண்டு, அதிலுள்ள "சத்தியமாய்" என்னும் காப்புச்செய்யுட்குப் பொருள் கூறும் முகமாக சிவபெருமானது பரத்வத்தையும், அன்னாரது கருணைத்திறத்தையும், அன்னார் அடியார்கள்பால் வைத்துள்ள அருளின் மிகுதியையும், சக்தி தத்வங்களையும் கம்பீரமாகவும் அழகாகவும் எடுத்து உபந்யஸித்தார்கள். இவற்றுக்கு அக்கிராஸநாதிபதியவர்கள் அழகான முடிவுரை கூறினவுடன் காலைச்சபை கலைந்தது.

மாலை 3—30 மணி.

திருச்சி வித்வான் ப்ரம்மஸ்ரீ இராமையங்கார் அவர்கள், கீழ்ப்படிதல் என்னும் விஷயத்தைப் பலமேற்கோள்கள் மூலமாக எடுத்துப்பெருமையாகக்கூறி ஸ்ரீ ராமபிரானது அரிய குணங்களில் இதுவும் ஓர் அரிய குணமென்று கம்பராமாயண மூலமாகக்காட்டியும் இட்டமாகப்பிரஸங்கித்தார்கள்.

பிறகு, காரைக்குடி கம்பராமாயணப்ரசாரகர் மே. வெ. கோவிந்தராஜையங்கார் அவர்கள் கம்பர் கவித்வம் என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு, கம்பராமாயணத்தில உள்ள சில அருமையான செய்யுள்களை உதாரணமாகக் காட்டி அவற்றின் நயங்களைத் தாம் அறிந்தவளவில் எடுத்து உபந்யஸித்தார்கள்.

பின்பு, தேவகோட்டை சிவநேசப்பிரகாசார்த்த பரிபாலன சங்கத்துக்காரியதரிசியாகிய ஸ்ரீமத் A. சாமிநாதபிள்ளையவர்கள், ஆகமம் என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு, அதனைக் காமிகாதி சிவா

கமம் என்றே தெளிவித்து, அவற்றை சிவத்விஜர்கட்கு அவசியம் போதிக்கவேண்டுமென்றும், அப்படிப் போதிக்க ஏற்பாடு செய்யாவிடின் நகரத்தார் திருக்கோயில்கள் பிரதிஷ்டை செய்ததன்பலனை யடையமுடியாது என்றும், இதற்கென்றே தேவகோட்டையில் சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறதென்றும், எல்லாச் சிவநேசச்செல்வர்களும் அதில் அங்கத்தவராக ஆவதோடு தங்கள் தங்கள் ஊரிலும் அதனது கிளைச்சபைகளாகச் சில சபைகள் ஸ்தாபித்து நடத்திவர வேண்டுமென்றும், இது தேவகோட்டையில் உள்ள ஷை சங்கத்தாரின் நோக்கமென்றும் அதனைத் தெரிவிப்பதே தாம் இங்குவந்தகாரியமென்றும் யாவரும் அறிந்துகொள்ளும்படி மிகவும் அழகாகப்படித்தார்கள்.

பிறகு, சொக்கலிங்கம் புதூர் வித்யாசாலைத்தலைமைத் தமிழ்ப் பண்டிதர். வித்வான் ப்ரம்மஸ்ரீ செ. ராமமூர்த்திஐயர் அவர்கள், ஈந்துவக்குமின்பம் என்னும் அரிய விஷயத்தைக்கொண்டு, பொருளுடையார்க்கு இக்குணமானது இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் ஒருங்கே தரவல்லது என்றும், பொருளுடையார்க்கு இதனைக் காட்டிலும் வேறொன்றிலும் இன்பம் நீடித்துநிலைத்திராது என்றும் திருக்குறள் நாலடியார் முதலிய அரிய நீதிநூல்களிலிருந்து மேற்கோள்களும் புராணங்களிலிருந்து கதைகளும் எடுத்துக் காட்டி இனிமையாக உபந்யஸித்து லௌகிக வைதிகம் என்னும் இரண்டு நிலையிலும் இதுபயன் தருவதொன்றென்று அறுதியிட்டார்கள்.

பின்னர், மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க்கலாசாலை தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். க. சொ. பாலசுப்பிரமணியக்கவிராயர் அவர்கள், மங்கையர்க்கரசியார் சரித்திரத்தைப் பெரியபுராணத்தின் சில செய்யுள்களை ஆதாரமாக்கொண்டு செவ்வனே எடுத்தோதியும், அம்மையின் குணங்களைத் திருவள்ளுவரது "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற—சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்னும் குறளிற் சொல்லப்பட்டுள்ள பெண்ணின் அருங்

குணங்களுக்கு இலக்காகி, இக்குறள் இந்த அம்மையின் சரித்திரத்தின் பொருட்டே தேவர்வாக்கினின்றும் எழுந்ததோ என்று யாவரும் வியக்கும்படியாகச் சொன்மாரி பொழிந்தார்கள்.

பின்னர்க் கடைசியாக, மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபையின் காரியதரிசி ஸ்ரீமான் குமரப்பசெட்டியார் அவர்கள், தாழ்ந்தவகுப்பாரை யுயர்த்தல் என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு நமது தேசத்துள்ள தாழ்ந்த வகுப்பார் நம்மால் கல்விமுதலான சவுகரியம் கொடுக்கப்பெறாது அநாதரிக்கப்படவே, வேறுமதத்தார் வலைக்குட்பட்டு அம்மதத்தினராகி நமதுதேசத்துமதம் நாகரிகம் ஜனத்தொகை இவற்றில் குறைவுகாட்டிவருகிறார்கள். ஆதலால், அவர்களை உயர்த்த வேண்டியமுயற்சிகளை அவசியம் தேடவேண்டியது நம்மெல்லோருடைய முதன்மையான கடமையென்று மிகவும் உருக்கமாகவும் கம்பீரமாகவும் உண்மையாகவும் பேசினார்கள்.

பிறகு, அக்கிராசனாதிபதி எழுந்திருந்து சொல்லவேண்டிய விஷயங்களெல்லாம் அழகாக முடிவுரை கூறிக்கடைசியாக நடந்த விஷயத்தில் தமது அபிப்பிராயத்தையும் வெளியிட்டார்கள். அஃதென்னவெனில், தாழ்ந்தவரைப்பற்றி நமது நண்பர் ஸ்ரீமான் குமரப்பசெட்டியார் அவர்கள் சொல்லிவந்த வெல்லாம் உண்மையே யாயினும், நமதுதேசத்துப் பிராசீனதர்மங்களாகியவர்ணதர்மங்கள் நிலைகுலையாதபடியாக அவர்கட்குக் கல்வியில் அவசியமானதைக் கொடுத்து அவர்களைத் திருத்தவேண்டியது நமது கடமைதான் என்று சொன்னார்கள்.

பிறகு, அக்கிராசனாதிபதியவர்களைப் பற்றிச் சபையில் வந்திருந்த வித்வான்களிற் பலர் வாழ்த்துப் பாக்கள்கூறிவாழ்த்துக் கூறவே ஹார சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்று இறைவனது திருவருளால் சபையானது மங்களகரமாக நடந்தேறியது.

பிறகு, மேளவாத்தியங்களுடன் அக்கிராசனாதிபதியவர்களை, அவர்கள் இறங்கியிருந்த ஜாகைக்கு நகரத்தார் அழைத்துச்சென்று உபசரித்துவந்தார்கள்.

B. RAJAGOPALA ROW

Paper correspondant

Karaikudi.

பாத்திர மறிந்து பிச்சை யிடுதல்.

உலகத்தில் தர்மங்களெல்லாவற்றிலும் சிறந்தது பிக்ஷையிடுவதே யாகும். அங்ஙனம் அந்தத்தர்மத்தைச்செய்யப்புகும்போது, பாத்திரமறிந்து இடலே தகுதியாகும். பாத்திரமாவார், நாம் இடும் பிக்ஷையை ஏற்றுக்கொள்ளத் தகுதியுடையவராயிருப்பவர். அதாவது அவர் வேறொரு வழியால ஸம்பாதித்துக்கொள்ள முடியாதவராக இருத்தல் வேண்டும். சில பிக்ஷுகர், ஒருவரிடம் ஒன்றைப் பெறும்வரையில், நல்லவர்போலவும் தக்கவர்போலவும் நடித்துவிட்டுப் பிறகு, தமது இயற்கைக்குணங்களால் நம்மை பிக்ஷையின் பலனையடையாதவர்களாகச் செய்கின்றனர்.

ஆகலின், நம்மால் கூடிய அளவு எப்போது மனம் வாக்கு செயல் இவற்றைப் பரிசோதித்தலே தகுதியாகும். ஒருவனை நன்றாய் ஆராய்ந்து அறிதல் கூடாதகாரியமேனும், கூடிய அளவு பரீக்ஷித்துச் செய்தலே தகுதியாகும். நாட்டுக்கோட்டை நகரப் பக்கங்களில், பலவிடங்களிலிருந்தும் யாசகர்கள் வந்துபோவதைப் பார்க்கிறோம். அவர்களிற் பாத்திரமாவார் உளரோவெனின், ஒருசிலருமிலர். சிலர் அதிகாரத்தாலும், வேறுசிலர் ஆசாரிய வேஷத்தாலும், மற்றும் சிலர் அக்கிரமகாரியங்களின் ஸமர்த்தினாலும், இன்னும் சிலர் சிபார்சினாலும் யாசகர்களென வந்து, தனவான்களிடம் கொள்ளைகொண்டுபோகின்றனர். உண்மையில் பாத்திரரா யுள்ளவர் வந்து தெருத்தோறும் நின்றும் வீடுதோறும் புகுந்தும், பயன்பெறாதவராகி வருந்துகின்றார்கள். அந்தோ! இங்குள்ள செல்வரை நம்பி வந்து பரிதபிக்கும் கூனரும் குருடரும் முடவரும் கிழவரும் நாதனற்றவரும் சிசுக்களும் எத்தனையென்பேன்! இவர்கள் இந்தப்பக்கங்கட்கு வந்து வெகுகாலம் திரிந்து வருந்திச் செல்வது ஒருபக்கமிருக்க, வெறியரும் தடியரும் வேஷக்காரரும் தாம்வந்த சிறுகாலத்திலேயே "கைநிறையப்பைநிறைய மனம்நிறையத் தனத்தைக் கட்டிக்கொண்டுவிட்டோம்" என்று வீரம்பேசிச் செல்வதைப் பார்க்கும்போது வயிறு எரிகிறது.

இதனால் தர்மம்செய்வதை நிறுத்தவேண்டுமென்றாவது, தர்மம் செய்வது குற்றம் என்றாவது நாம் சொல்லப் புகவில்லை. என்றும் தனவான்களை ஏழைகள் பின்பற்றவேண்டுவது அவசியம்தான். தனவான்களும் அவர்களை ஆதரிக்கவேண்டுவது கடமைதான். உத்தம தனவந்தர் தர்மச்செயலாலன்றி, வேறு எவ்வகையினும் திருப்தியடையமாட்டார் என்பது உண்மையே; ஆயினும், தாம் செய்யும் காரியத்தை ஆலோசித்துச்செய்தே அதன் நற்பயனைப் பெறவேண்டுமென்பதே எமது கோரிக்கை. அப்படியல்லாமல், அபாத்திரருக்கும் யோசியாமல் கொடுப்பதனாலே, அவர்களைக் கெடுப்பதுமன்றியில், ஏனையோரையும் இந்தக் கபட காரியத்தில் தூண்டிவிட்டவர்களாகவும் ஆகிறார்கள்.

அபாத்திரரேனும் பாத்திரரேனும் ஆக, அவர்கள் பசித்து வந்தவர்களாயின், அவர்களது பசித்தழலை அவித்துவிடவேண்டியது செல்வர்க்கேயன்றி ஏனையவர்க்கும் கடமையாகுமென்றால், செல்வர்கள் செய்வதில் யாதும் குற்றமில்லை. அப்படிப் பசியாற்றும் விதத்திலும், கையில் பணமாக உதவுவதிலும் உணவாகவுதவுவதற்குத்தக்க ஏற்பாடுசெய்தலே தகுதி. இப்படித் தேசாந்திரியாக உணவுக்கென்றே திரியும் பலரன்றி, தமது சொந்தநாட்டிலிருந்து பிழைக்கமுடியாமல், குடும்பத்துடன் செல்வம் நிறைந்துள்ள நாட்டிற் பரம ஏழைகளும் வந்துகொண்டிருப்பதைக் காண்கிறோம். இவரைக்காப்பதில், செல்வர் எவ்விதத்திலும் கடமைப்பட்டவரேயாவர். ஆயின் அச்செல்வர் தமது அந்தக்கடமையைச்செலுத்தும் காரியத்தில், நாமும் ஒரு யோசனை சொல்ல உத்தேசிக்கிறோம். என்னவெனில் கீழே சொல்கிறோம்.

குடும்பத்துடன் யாசிக்கவந்தவர்கள், சிறிதுகாலம் இந்தப்புக்கங்களில் திரிந்துவிட்டுப் பிறகு தங்கள் ஊருக்கே செல்பவர்களாக இருப்பினும், அன்றித் தமது புத்திரர்கட்கோ புத்திரிகட்கோ விவாக விஷயமாக வந்தவராக இருப்பினும், அவர்களை வெகுநாள் காத்திருக்கச்செய்யாமல் விரைவில் கொடுத்து அனுப்புவதே உசிதம், இல்லையாயின், காத்திருந்து பெற்ற தனமெல்லாம் உண்டு உடை

முதலியவற்றுக்கேவாகித் தமது உத்தேசம் நிறைவேறாது மற்றும் வருந்துவாராகின்றனர். அன்றித் தம் நாட்டையே விட்டு எங்கேனும் இருந்து பிழைக்கலாம் என்று வருவாரும் உளரேல், அவர்கட்குச் செல்வர் ஏதேனும் வேலையிட்டுக் கூலியாகக்கொடுப்பதே நலமாகும். அப்படிக் கூலியாகக்கொடுப்பதற்குத் தகுந்த யோசனையும் ஒன்றிருக்கிறது. இந்தப்பக்கத்துப் பலநாடுகளிலும் உள்ள தனவான்கள், தந்தம் குடும்பங்களில் தர்மத்துக்கென்றே சேர்த்து வைத்துள்ள பொருள்களால், யாவரும் ஒருங்கே ஆலோசித்துத் தக்க மத்தியதானமான ஊரில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தியதனை நடத்திவர முயன்றார்களாயின, வந்த யாசகரும் தமது மானக்கேடான தொழிலைவிட்டு வேலைசெய்து கூலிவாங்கியுண்டுகளிப்பார்கள். இதனால் தேசமும் நாகரிகத்திற் சீர்பெறும்.

ஆகையால், சீமான்களே! இந்த இலாபஸாதகமான காரியத்தைச் செய்வதற்கு நீங்கள்தாம் முன்வரவேண்டும். நம் தேசம் பிக்ஷுகர்களாலும், பாத்திரமறியாது பிக்ஷையிடுபவர்களாலுமே சீர்கெட்டிருக்கின்றது என்று குறைகூறப்படுகிறது. இவ்விரண்டு குறைகளும் உங்களாலேயே நீங்கவேண்டும். ஏழைகள் பிக்ஷையெடாமலும் செல்வர்கள் பிக்ஷைகொடாமலும் ஒருபோதுமிருக்க முடியாது. ஆயின் அவற்றை தேசத்தின் முன்னேற்றத்தையநுசரித்துப் பரிஷ்கரித்துக்கொள்ளவேண்டுமென்பதேதான் நமது கோரிக்கை.

சமசீதோஷ்ணமுடைய நமது தேசத்தில் எவ்விதத் தொழிலையும் செய்து நாமே சித்திபெறலாகும். அவற்றுக்கு வேண்டிய கல்வியினையும் நமது மாணவரிற் பலர், பல தேசங்கட்குச் சென்று தமது சுகங்களையெல்லாம் இழந்து அங்குப் பலநாள் வசித்துக் கற்று வந்திருக்கின்றனர். தம்மை ஆதரிப்பார் இன்றிவருந்தி நிற்கின்றனர். ஆதலால், நீங்கள் தேசத்தில் அபிமானங்கொண்டு விழித்தெழுந்து தொழிற்கல்வி தொழிற்சாலை முதலிய நல்லதர்மங்களைச் செய்ய முன் வருவீர்களாயின், உங்களது தர்மமும் பயன்பெற்றதாகும். நமது தேசத்தின் ஏழ்மையும் நீங்கும். இதரதேசத்துக்குச் சமமாய்

களும் அதிகமாக வந்துகொண்டிருத்தல் நின்றுவிடும். அப்போதே தேசம் தேசமாகும். ஏனெனில், இந்தத்தேசத்தினுடைய விளைபொருள்கள் இந்தத்தேசத்திலேயே செய்பொருள்களாக்கப்பட்டு இந்தத்தேசத்திலேயே அழியுமானால், விலையும் சரஸமாகும்; ஏழ்மையும் நீங்கும். அறிவும் விரியும். பொருளும் குவியும். தேசமும் தேசமாகும், எல்லோரும் ஸஹோதரரென்ற ஒற்றுமையும் உண்டாகும்.

M. V. ராஜம்.

நன்னடக்கை.

உலகில் ஒருவரது லோகயாத்திரையிலும் ஆத்மயாத்திரையிலும் வெற்றிதருவது நன்னடக்கையேயாகும். செல்வமுடைமை வலியுடைமை அறிவுடைமை புகழுடைமை ஆற்றலுடைமை நோயின்மையாகிய யாவும்ஒருவற்குண்டெனினும், அவற்கு நடக்கை நன்னர் அமையாவிடின் அவையாவும் பேடிகைவாள் போலாகும். நடக்கையொன்றே உயிர்க்குச்சுவையளிப்பது. ஒருவனை, அவனது நடக்கையினின்றும் பிரித்துத் தனியாக மதித்தல் இயலாத காரியம். ஏனெனில், அந்நடக்கையொன்றே அவற்குப் பெருமையும் சிறுமையும் தருவது ஆகும். மனம் வாக்கு காயம் எனும் மூன்றனுனும் ஒருவரது நடக்கை வெளியாகிறது. இம்மூன்றுமே ஒருவனது நடக்கையையாக்கிக் கொள்வதற்கு ஸாதனங்கள். தனது, நன்னடக்கையையே ஒருவன், தனக்கு உயர்கதியாகக்கொண்டு அதனைக் கெடுக்கவரும் ஆசைகளை யொதுக்குமாற்றல் உள்ளவனாயின், அவனே உலகத்தாரால் உத்தமபுருஷனென்று மதிக்கப் பெறுவான். ஆசைக்கு அடிமையானவன் உலகத்துக்கே அடிமையாவான்; ஆசையைத் தனக்கு அடிமையாக் கொண்டவனே தப்

பாது உலகத்தனையடிமைகொண்டவனாவான். புகழுடம்பு கொண்டு நிலவுறும் புவிசக்கரவர்த்திகளும் கவிசக்கரவர்த்திகளும், நமது நடக்கை யொன்றையே கவனித்துக்கொண்டு, அதனை நீக்கவரும் ஏனைய செல்வம் முதலியவற்றைப் பரித்யாகம் செய்திருக்கிறார்கள். நன்னடக்கை யென்னும் ஏணியில் ஏறிச் செல்கிறவன் பலபடிகளை வருந்திக் கடந்தேறினவனேனும், தன்னயத்தின் பொருட்டு ஒருநல்லகாரியத்தைச் செய்யப் புகுவானானால், உடனே அதிவிரைவில் கீழே தள்ளப்படுகின்றான். அவனை உலகம் மதிப்பதில்லை.

ஆயின், ஒருவர் நன்னடக்கை யுடையவராக இருக்க எவ்வெக்குணங்களைப் பெற்றிருக்கவேண்டும் என்பதை யாராய்வோம். யார்க்கும் அதிலோலபராகவும் மெய்ம்மையுடையவராகவும் இருக்க முயலவேண்டும். உலகத்தில் முதல் குற்றம் பொய்ம்மையென்றே மதிக்கப்படுகிறது. மெய்ம்மை யொன்றே யொருவற்கு மெய்க்கணியப் பெறும் மெய்ப் பூணாகும். பகைவர் எத்தனையர் எதிர்த்து நிலை கெடுக்கினும், உண்மையுடையானை உலகம்நிறுத்தி, அவற்கே வெற்றிதரும்.

வினயமும் அதிகாரமும் ஒருவனது நன்னடக்கையை அலங்கரிக்கின்றன. இவ்விரண்டும் தம்முள் மாறுபட்ட குணங்களேனும், முன்னேற விருப்பமுடைய ஒருவற்கு இவ்விரண்டும் வேண்டற்பாலன. முதியாரிடம் வினயமும் இளையாரிடம் ஆதிக்யமும் காட்டவேண்டும். ஆதிக்கியமாவது தன்னைச் சூழ்ந்தும் சார்ந்தும் இருப்போரை நயத்தாலும் பயத்தாலும், தனக்கடங்கி நடக்கும்படிச் செய்யவேண்டுவது. ஒருவன் தனது உத்யோக நிலையிலிருந்து கொண்டு, தனது கீழுள்ளவரிடமும் வினயத்தைக் காட்டும் குணமுடையவனாயின், அவனது அதிகாரம் நன்றாக நடத்தப்படுவதாகிறதில்லை. இல்லையாகவே, அவனுக்குக்கீழுள்ள புத்திசாலியொருவன் இவனை மேற்கொள்வன். அதனால், தேகயாத்திரையின் ஒழுங்கு பெற்ற முன்னேற்றம் தடைப்படுகிறது. ஆகலின் பெரியாரிடம் வினயத்தையும் சிறியாரிடம் ஆதிக்யத்தையும் காட்டவேண்டும்.

பொறுமையும் விடாமுயற்சியும் நடக்கையை நன்மையில் நாட்டக்கூடியவையாகும். இவையுடையான், மலைபோல்வரு துயரைப் பனிபோற் கண்டு பயனடைவான். நாம் ஒன்றினைச்செய்து முடிக்க வெண்ணித் துணிந்துவிட்டால், அக்காரியம் முடிவுபெறுகிறவரையிலும் எத்தனைக் கஷ்ட நஷ்டங்கள் வந்தபோதிலும், பின்வாங்காமல் முன் ஓங்கிநிற்கவேண்டும்.

கடமையென்பதொன்றும் ஒருவரை நடக்கையில் கடைத்தேறச் செய்கிறது. எக்காரியத்தைச் செய்யப்புகினும், அதனால் தனக்கு ஒரு உதவியையும் நாடாமல், அது ஒப்புரவின்பாற்படுவதொன்றாயின், அதனைச் செய்துமுடிப்பது தனது கடமையென்றே நினைத்துச் செயல்வேண்டும். நாம் நினைப்பதும் அறிவதும் நம்பிக்கை கொள்வதும் எல்லாம், பிறர்க்கு உபகரிப்பதற்கென்றே கருத வேண்டும். இதே நம்கடமையென்று கருதவேண்டும். கடமை என்னும் நோக்கத்துடன் அல்லாது ஒருவன் நினைப்பதும் அறிவதும் செய்வதும் எல்லாம் அவனது நன்னடக்கையின் விருத்திக்கு உபகாரணங்கள ஆகாவாம். ஒரேஒரு குணத்தைப்பற்றினவனாயினும் கடமையோடு முன்னேறுவனானால், அவன் நன்னடக்கையில் உயர்ந்தவனாவான். அப்போது பிறமக்களால் மதிக்கப்படுகின்றான்.

ஸ்ரீராமபிரான் உலகினுக்கு நன்னடக்கையை நடத்திக் காட்ட வந்த ஒருமூர்த்தி. அவரிடம் அச்செயலுக்கு ஸாதனங்களாயிருந்தவையோ, வினயம் உண்மையுடைமை பொறுமை அன்புடைமை ஒப்புரவு எனும் இவையேயாகும். அரிச்சந்திரராஜன் தனது உண்மையுடைமை முதலியவற்றையே ஸாதனமாகக் கொண்டு, கைப்பற்றிப், பலதுன்பங்களையும் நீந்தி, நன்னடக்கை யென்னும் கரையேறியிருக்கின்றான். யுதிஷ்டிரர் (தர்மராஜன்) உண்மையும் பிரியமும் கலந்துறவாடுதலும் பொறுமையும் உடையவராக இருந்தார். இவைகளே நன்னடக்கைக்குச் சாதனங்களாகின்றன.

நன்னடக்கையே ஒருவற்கு நல்லுயிராகும். அஃதொன்றே அவற்குப் பரமானந்த திருப்தியைத் தரக்கூடியது. பகுத்தறிவால்

நல்லவர் சேர்க்கையையும், அச்சேர்க்கையால் நற்செயலையும், அச்செயலால் நற்பழக்கத்தையும், அப்பழக்கத்தால் நன்னடக்கையையும் பெறுகிறோம். ஆகலின், தன்னயத்தில் வைத்த ஆசையையொழித்து பிறர்க்குச் செய்வதே நமது கடமையென்றெண்ணிப், பகுத்தறிந்து ஒருகாரியத்தைச் செய்யப்புகுவோமாயின், நமதுநடக்கை நன்னடக்கையாகும்.

தீநடக்கையை யுண்டுபண்ணும் கெட்டகுணங்கள், நமக்கு, பல பிறப்பின் பழக்கங்களாக இருக்கலாம். எனினும், அவற்றை நமது பகுத்தறிவு என்னும் வாளால் அறுத்துத் தள்ளவேண்டும். மனிதவகுப்பார் இரண்டு பிரிவினையாகப் பிரிக்கப்படுகிறார்கள், "உபகாரிகள்" என்னும் "அபகாரிக" ளென்றும் அவர்கள் அழைக்கப் பெறுவர். உபகாரிகளென்பார், "உண்ணும் சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும்" எல்லாம் உலகத்துக்கேயென்ற ஒப்புரவிற்கு ஒல்காதாராகி, தமது உடல் பொருள் ஆவி மூன்றனையும் பரோபகாரத்தே செலுத்தும் ஸத்புருஷர்களாக இருப்பர். அபகாரிகளென்பார், தாமின்புறும் பொருட்டு ஏனையோர்க்குத் துன்பம் செய்தும், தமக்கு யாதும் இன்பம்தராதபோதும், ஏனையோரைத் துன்புறுத்தலே தமது இயற்கையாகக்கொண்டும் இருப்பார்கள்.

உலகத்தின் சீதோஷ்ணங்களும் குணங்களை மாறுபடுத்துவதுண்டு என்பர். என்றாலும் இந்தநியாயம், அறிவின் மிகுந்து இந்திரியங்களைத் தம்வசத்தவாக்கிக் கொண்டிருக்கும் பெரியோர்க்கு ஒவ்வாதது. ஏனெனில், அறிவில்லாதவர்கள் வசித்திருந்த தேசம் இப்போது தக்க அறிஞர்களால் நிறைந்துள்ள தன்மையையும், நிறைந்த அறிவாளிகள் வசித்திருந்த தேசம் இப்போது கேவலம் வனசரர்களே நிறைந்துள்ள தன்மையையும் உணர்கிறோம்.

உலகில் பிறந்தவருள் "பூர்ண அறிவுடையார்" என்று சொல்வதற்குயாரும் இலர். எவர்க்கும் ஏதேனும் ஒருகுறைஇருந்துகொண்டே இருக்கக்காண்கிறோம். ஆகலின், எல்லாரும் தமது நடக்

மையில் திருந்தி உணர்வில் யிருந்தவராகி வருவதற்கு முயலவேண்டும். ஒருகாரியத்தைச் செய்யப்புகும்போது, ஸாத்விகத்தில் பழகியுள்ள சுத்தமனதுடன் ஆலோசித்தே செய்யத் தொடங்குவோமானால், யாதும் தீமைதோன்ற நியாயமேயிராது. அதுவே நன்னடக்கையிற் பழகுவதற்குத்தக்க மார்க்கமாகும். மனத்தினை ஸாத்விகத்தில் பழக்குவதற்குத்தக்க ஸாதனம் கற்றறிந்தபெரியோரது சேர்க்கையேயன்றி வேறு யாதுமில்லை.

ஆகையால், தாமத்துடன் கூடினவராயிருக்கப் பழகவேண்டும். அதற்கு ஸாதனமான மதக்கொள்கைகளை நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும். அவற்றைத் தெரிந்துகொள்ள நல்லாசிரியருடைய பழக்கம் எப்போதுமிருக்கவேண்டும்.

பத்திராதிபர்.

நீதிமொழிகள்.

மரத்திலும் கல்லிலும் மண்ணிலும் கடவுள் இல்லை; எண்ணத்திலேயே இருக்கின்றார். ஆதலின், நல்லெண்ணமே உயர்சிறப்புக்குக் காரணம்.

*

* *

மந்திரத்திலும், புண்ணியதீர்த்தத்திலும், அந்தணரிடத்திலும், கடவுளிடத்திலும், சோதிடனிடத்திலும், வைத்தியனிடத்திலும், குருவிடத்திலும் நாம் வைத்திருக்கும் பக்திக்குத் தக்கபடி ஸித்தியுண்டாகும்.

*

* *

ஆகாயத்தில் மேகங்களிருக்கின்றன; மலையில் மயில்களிருக்கின்றன; இலக்ஷமைல்களுக்கு அப்பால சூரியனிருக்கிறான்; நீரில் தாமரையிருக்கின்றது; இரண்டுலக்ஷ மைல்களுக்கப்பால் சந்திரனிருக்கின்றான்; ஆம்பல்மலர்கள் பூமியிலிருக்கின்றன. ஆயினும், அவைகளில் ஒன்றுக்கொன்று நட்பு இருக்கின்றமையின், தூரத்திலிருப்பது தெரிவதில்லை.

*

* *

“இந்தியக்கிழச்சிங்கம்”

தாதாபாய் நவ்ரோஜி.

1825—1917.

நமது இந்தியக்கிழசிங்கமாகிய ஸ்ரீமான் சாதாபாய் நவ்ரோஜி, சென்றமீ 30௳ சனிக்கிழமை மாலை 5-மணிக்குப பம்பாயில் தேஹவியோஹமானதைக்கேட்டு மிகவும் விசனிக்கிறோம். அவர்கள் சென்ற ஒருமாதகாலமாகவே வர்ஸோவாவில் யிருந்த அசவுக்யமாக இருந்துவந்ததால், பம்பாயில் தமது மருமகனது ஸ்தானமாகிய கும்பாலா குன்றுக்கு அழைத்துவரப் பெற்றிருந்தார்.

அவரது தேஹத்துக்குச் செய்யவேண்டிய உத்தரகார்யம் மறுநாளாகிய ஞாயிற்றுக்கிழமை மாலையில் வெகு விமரிசையாக நடந்தேறியது. அந்தச்சமயம் சுமார் 15,000 ஜனங்கள் வந்திருந்தார்கள். இந்தியாவின் பல இடங்களிலிருந்தும் வரக்கூடியவர்கள் வந்து சேர்ந்திருந்தார்கள். அவர்களுள் முக்கியமானவர் சிலரைச் சொல்லுவோம்.

ஸர். ஜே. ஜீஜீபாய்; ஸர். டின்ஷா. இ. வாசா; மிஸ்டர். எச். ஏ. வாடியா; ஸர், என். ஜி. சந்தர்வாக்கர்; மிஸ்டர், புருஷோத்தமதாஸ் தாகூக்தாஸ்; ஆனரபில், மிஸ்டர். எம். ஏ. ஜின்னு, மிஸ்டர் ப்ஸைப்பாய் ஜாமகபாய் லால்ஜி முதலியவர் பிராப்தமாகி இருந்தார்கள்.

நமது மஹாபுருஷரது
சரித்திரச்சுருக்கம்.

ஸ்ரீமான் தாதாபாய் நவ்ரோஜி, 1825௵ செப்டம்பர்மீ 4௳ பம்பாய் நகரத்திலே ஒருமையான பார்ஸி குடும்பத்தில் பிறந்து, தமது 4-வது வயதிலேயே தமது பிதாவை யிழந்து, தந்தையில்லாச் சிறுவராக வளர்க்கப் பெற்றார். அவரது தாயார் அவருடைய

படிப்பில் மிகுதியும் கவலை யெடுத்துக்கொண்டு வந்தபடியால், அந்தக்காலத்து "எல்பின்ஸ்டன் இன்ஸ்டிட்யூஷன்" என்று வழங்கப்பெற்றுத் தற்காலம் "எல்பின்ஸ்டன் காலேஜ்" என்று வழங்கப்பெறுகிற கலாசாலையில் உதவிப்பணம் பெற்ற ஒருமாணவராகச் சேர்த்துக்கொள்ளப் பெற்றுநன்றாக ஊக்கத்துடன் படித்துவந்தார். அப்போது பம்பாயில் பிரதான ஜஸ்டிஸாக இருந்த ஸர். எர்ஸ்கின் பேரி என்பவர், நமது சிங்கத்தின் புத்திசதுரத்தையும் திறமையையும் கல்வியின் விருப்பத்தையும் கண்டு அவரை பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படிப்பிக்கும் பொருட்டு லண்டனுக்கு அனுப்பிக்க வேண்டிய பிரயத்தனங்கள் செய்தார்; எனினும், அது நிறைவேறாமல் போயிற்று.

ஆகையால், 1850 வருஷத்தில், அவர் தாம் படித்துவந்த காலேஜிலேயே ஒரு போதகராக நியமனம் பெற்று, பின் 4 வருஷங்களுக்குள் தக்க அதிர்ஷ்ட வசத்தால் அதே காலேஜுக்குப் பிரதான போதகராகவும் அமர்ந்திருந்தார். ஆனாலும் இரண்டு வருஷங்கட்கெல்லாம் அப்பதவியை யுதறிவிட்டு, ஒருபெரிய கம்பெனியின் ஏஜண்டாக லண்டனிலிருந்தே வேலைபார்க்கும்படியாக ஏற்பட்டதனால், அங்குப்புறப்பட்டுப் போய்விட்டார்.

1865 வருஷத்திலிருந்து 1869-ம் வருஷம்வரையில், நமது மஹாபுருஷர், இங்கிலந்திலேயே வாசஞ் செய்துகொண்டிருந்து, அங்கே இந்தியாது விஷயங்களை ஆங்கிலப் பொதுஜனங்கட்குப் பல மார்க்கங்களிலும் எடுத்துத்தெரிவித்துக் கொண்டிருந்தார். அங்கே, மாகாணங்கள்தோறும் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டு, அவ்வவ்விடங்களிலெல்லாம், இந்தியாவைப் பற்றியே பிரசங்கங்கள் செய்துகொண்டு, ஆங்கிலஜனங்கள் இந்திய விஷயங்களை கவனிப்பதற்கென்றே "லண்டன் இந்தியன் அஸோஸியேஷன்" என்ற ஸபையையும் வெகு ஊக்கத்துடன் ஸ்தாபித்தார். இதன் இடையில் தாம் இருந்தகம்பெனியை விட்டு தனியே வியாபாரம்செய்ய முயற்சித்து நடத்திவந்தாரானாலும், ஒரு ஹிந்துகனவானுக்கு அவசியம்செய்து முடிக்கவேண்டிய உதவியினால் தமது சொத்துக்களெல்லாம் குறைந்து வியாபாரம் நின்றுபோகும் படியாக நேர்ந்து

விட்டது. என்றாலும், நமது சிங்கம் தமது தளராத முயற்சியாலும் கண்ணியத்தினாலும் தமது கடன்காரர்களால் மானத்தைக் கெடுத்துக் கொள்ளாமலே கௌரவமாகக் கடன்களையெல்லாம் அடைத்துவிட்டு, 1869-ம் வருஷத்தில் பம்பாய்க்குத் திரும்பிவிட்டார். அப்போது பம்பாய் நகரஜனங்கள் அவரை நல்லுபசாரத்துடன் வரவேற்றார்கள்.

பிறகு, இந்தியாவின் வரவு செலவு விஷயமாக விசாரணை செய்வதற்கென்று பார்லிமெண்டினால் ஏற்படுத்தப் பெற்றிருந்த கமிட்டிக்கு சாட்சியாகச்சென்று, இந்தியாவின் ஏழ்மைத் தன்மையை மிகவும் உருக்கமாகவும் உண்மையாகவும் பேசி, ஆங்கிலப் பொது ஜனங்களின் கவுரவத்துக்கு விஷயமானார். அப்போது இந்திய ஜனங்களுள் ஒவ்வொருவருக்கும் சராசரிவருஷ வரும்படி ரூபாய் 20 தானென்று அவர் அறுதியிட்டுச் சொன்னதை ஆங்கில ஜனங்கள் ஆராய்ச்சியால் உண்மையென்றே தெரிந்து இவரது புத்தியை மிகவும் வியந்தார்கள். இன்னும் இந்தியாவின் அரசாட்சி முறையைப் பற்றியும் ஆங்கிலப் பொதுஜனங்கட்கு நன்றாகஎடுத்துக் காட்டினார்.

1874-ம் வருஷத்தில், பரோடா ஸமஸ்தானம் வெகுசீர்கெட்ட நிலைமையில் இருந்துவந்ததால், அந்தச்சமயத்தில் திவானாக நியமிக்கப் பெற்றார். அமைச்சப்பதவியை ஏற்றுக்கொண்ட சிறு காலத்திலெல்லாம் ஸம்ஸ்தானத்தை நல்லநிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டார். இதனைப்பொறாத, அங்குள்ள பிரிட்டிஷ் ரெஸிடெண்டான கர்னல் பேயர் என்பவர் நவ்ரோஜியை விலக்கிவிட மிகுந்த பிரயத்தனப்பட்டார். ஆனாலும், இங்கிலந்தில் இருந்த லார்டு ஸாலிஸ்பரி போன்ற ராஜதந்திரிகள், இவரது அரியசெயல்களைக்கண்டு வியந்து மெச்சிக்கொண்டதனால், கர்னல் பேயருடைய முயற்சி பலிக்கவில்லை. என்றாலும் நமதுசிங்கம் அந்தவேலையை ராஜிநாமாசெய்துவிட்டுப் பம்பாயிலேயே வசித்துவந்தார்.

பிறகு, இந்தியாவின் பொருட்டு இங்கிலந்தில் செய்யவேண்டியவேலை அதிகமாக இருந்ததனால், 1885-ல் திரும்பவும் இங்கிலந்துக்குப் புறப்பட்டார். அங்கே 1887-ம் வருஷத்தில் ஹோசங்

கேப்ரன் என்னும் வட்டத்துக்கு ஒரு பிரதிநிதியாகத் தேர்ந்தெடுப்பதற்கு அபேக்ஷகராக நின்றார். மனோதைரியமும் பொதுஜனஉழைப்பில் ஆசையும் லக்ஷியத்தில் நம்பிக்கையும் அவருக்கு அதிகமாக இருந்ததனால், அவர் அதற்கொரு அபேக்ஷகராக இருக்கும்படி நேர்ந்தது. இருந்தாலும் இவர் ஒரு கறுப்பு மனிதர் என்னும் ஒரே காரணத்தினால், இவருக்கு 1950 ஓட்டுகளும் எதிரிக்கு 3658 ஓட்டுகளும் கிடைத்தபடியால் அதில்இவருக்குத் தோல்வியேகிடைத்தது. இதனால் நமது சிங்கம் மனம் சலிக்கவில்லை. பிறகும் விடாமுயற்சியாலும் பொதுநோக்குண்மையாலும் அன்பின் முறையாலும் பொது ஜனங்களின் அபிமானத்தைப் பெற்றுக் கொண்டு, காமன் ஸபையில் முதன் முதல் இந்தியராக ஸ்தானம் பெற்றார். ஆங்குத் தமது நண்பர்கட்கு இந்தியச் சகோதரர்களின் நிலைமையைப் பலபடியாகவும் எடுத்துக்காட்டுவதே அவருடைய முக்ய வேலையாக இருந்தது. இவர்களுடைய முயற்சியின் வன்மையினால்தான் ஆங்கிலர்கள் இந்தியர்களைப்பற்றிச் சிறிதேனும் கவனிக்க ஆரம்பித்தார்கள்.

இந்தியவிஷயங்களைப் பற்றிப் பார்லிமெண்டின் விசாரணை ஏற்பட்ட காலங்களிலெல்லாம், அந்தக்கமிட்டிகள் ஒவ்வொன்றிலும் நமது சிங்கம் தகுந்த சாக்ஷி சொல்லியிருக்கிறார்கள்.

அப்போது, அதாவது 1892 ம் வருஷத்தில் இந்தியாவில் லாஹூரில் நடந்த காங்கிரஸுக்கு இவர்களையே அக்கிராஸனாதிபதி ஸ்தானம் வகிக்க பிரார்த்தித்திருந்தபடியால், அந்தஸ்தானத்தை வகிக்க இவர் இங்கிலந்திலிருந்து புறப்பட்டார். அவர் பம்பாயிலிருந்து லாஹூர் போகும் வரையிலுள்ள ஒவ்வொரு ஸ்டேஷனிலும், ஒரு அரசன் பெறக்கூடிய மரியாதைக்கு மேற்பட்ட மரியாதைகளைப் பெற்றது மாத்திரமன்றி, லாஹூரிலும் எழுத்தால் எழுதமுடியாத அவ்வளவு வைபவத்துடனும் அன்புடனும் வரவேற்கப் பெற்றார். இந்த வரவேற்பு மகிமையைப் பற்றி, இந்தியநண்பர்களின் ஒருவரான ஸர்வில்லியம் ஹண்டர் என்னும் ஐரோப்பியர் லண்டன் டைம்ஸ்பத்திரிகையில் நீண்ட ஒருவியாஸம் எழுதினார். இதுமாத்திரமல்லாமல், அந்தநிகழ்ச்சியின் பிரதாபத்தைக்குறித்து

அநேகதந்திகள் லண்டன்மா நகரத்துக்குப் பறந்துகொண்டே இருந்தன.

பின்னர் 1906௵த்தில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸில் இரண்டாந் தடவையாக அக்கிராஸனாதிபத்யம் வகித்து, இந்தியர் சுய ஆட்சியையே தமக்குரிய லட்சியமாக வைத்திருக்கவேண்டுமென்று உறுதிமொழி கூறியிருக்கிறார்.

அவர் லண்டனில் காங்கிரஸ் மஹாஸபையின் ஆதரணையில் நடைபெறும் இந்தியா பத்திரிகையில் பின் வரும் பொருள் உள்ள கடிதத்தை இந்தியர்களுக்கு எழுதியனுப்பியிருக்கிறார்.

"ஐம்பது வருஷங்களாக நான் பொதுவாழ்க்கையில் எனது ஜீவிய காலத்தைச் செலவிட்டிருக்கிறேன். ராஜீயவிஷயம் ஸமுதாயக்கல்வி வியாபாரம் நிர்வாஹம் முதலிய அம்சங்களிலும் நான் உழைத்திருக்கிறேன். எல்லோரையும்போலவே எனக்குத் தோல்வியும் ஜயமும் கிடைத்ததுண்டு. ஜயமடைந்தபோது நான் ஸந்தோஷப்பட்டதுமில்லை. தோல்வியுற்றபோது துக்கப்பட்டதுமில்லை. இங்கிலந்தில் லிபரல் கக்ஷியே சிதைந்துபோயிற்று. எனவே, நானும் இந்த எலெக்ஷனில் தோற்றுப்போனேன். "பொறுமையுடனும் பிடிவாதத்துடனும் முன்னேறிச்செல்" என்ற முறையையே நான் எப்போதும் ஏற்று நடப்பவன். நல்லகாரியத்திற்காக உழைக்கும்போது ஜயமேற்பட்டாலும் அபஜயம் ஏற்பட்டாலும் இரண்டும் எனக்கு ஒன்றுதான். நான் என்னுடைய முயற்சியைத் தளரவிடமாட்டேன். என்னுடைய தேசத்திற்கு உழைக்க எனக்குச் சரீரபலமும் தருணமும் இருக்கும்வரையில், நான் பாடுபட்டுழைத்துவர என்னாலியன்றமட்டும் முயற்சிசெய்வேன். எனவே, மீண்டும் ஒருதடவை காமன்ஸ் ஸபையில் ஸ்தானம் பெற நான் முயற்சிசெய்யப்போகிறேன். காமன்ஸ் ஸபையில்தான் இந்தியாவின் குறைகளையும் இந்தியாவில் செய்யப்படவேண்டிய சீர்திருத்தங்களைப்பற்றிய சண்டைகளையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்துவதற்கான சண்டைகளையும் நடத்தவேண்டும். இந்தியாவின் நன்மையே ஏகாதிபத்தியத்தின் நன்மையாக இருக்கின்றது. இந்தியாவின் லாபநஷ்டங்களைவிட இந்தியாவில் தோன்றியிருக்கும் பிரச்னைகள் தீர்க்கப்படுவதே ஏகாதிபத்தியத்துக்கு மிகவும் அவசியமானதாகும். பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் நிலைபெற்று நிற்பது இந்தியப் பிரச்னைகள் தீர்க்கப்படுவதைப் பொறுத்ததாயிருக்கின்றது. இவ்விஷயமாய் எனக்குள்ள அபிப்பிராயங்களையும் நோக்கங்களையும் எத்தனையோதரம் பகிரங்கமாய் வெளியிட்டிருக்கிறேன். இந்தியாவில் சத்தியமும் பலமும் வாய்ந்த பலசக்திகள் வேலைசெய்துகொண்டேவருகின்றன என்பதைத் தவிர நான் இங்கு அதிகம் சொல்ல

வேண்டியதில்லை. ஏகாதிபத்யத்தின் லாபநஷ்டங்களைத் தற்போதைய ராஜதந்திரிகள் கவனித்து, ஜனங்களுக்குள் க்ஷேமத்தையும் திருப்தியையும் உண்டுபண்ணிவைக்காமற் போவார்களானால், தற்போது ஏகாதிபத்தியத்தில் தோன்றியிருக்கும் சக்திகள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு விரோதமாய்க் கிளம்பி மகத்தான ஆபத்துகளை விளைவிப்பது ஆச்சரியத்துக்கிடமாகாது. இப்படிப்பட்ட பேராபத்து ஏகாதிபத்தியத்துக்கு நேரிடாவண்ணம் தடுக்க என்னாலானமட்டும் முயற்சிசெய்வேன். நான் தோல்வியடைந்துபோனதினால் மனஞ்சலித்துவிடுவேனென்று இந்தியாவிலுள்ள எனது சகோதரர்கள் சிறிதும் எண்ணவேண்டியதில்லை. இந்தியவிஷயங்களில் கவனம் பாராட்டும் வழக்கம் பிரிட்டிஷ் ஜனங்களுக்குள் கொஞ்சங்கொஞ்சமாய்ப் பரவிவருகின்றது. எனவே, இந்தியாவுக்கு ஸதாகாலம் தரித்திரத்தையும் அதிருப்தியையும் உண்டுபண்ணிவைக்கின்ற இயற்கைக்கு விரோதமான தற்போதைய ஆட்சி முறையையே பிரிட்டிஷார் இந்தியாவில் வற்புறுத்தி வராமலும், இந்திய ஜனங்களின் க்ஷேமத்தை நாடி அதன் மூலமாய்த் தங்களுடைய க்ஷேமத்தையும் விருத்திசெய்துகொள்ளவும் பிரிட்டிஷார் முயற்சி செய்வார்களென்று நம்பிக்கையுடன் நான் உழைத்துவருவேன்.

சு. மித்திரன்.

இந்த மஹான் தமது ஜீவியகாலத்தில் எத்தனையோ அரிய பெரிய காரியங்களில்தலையிட்டு விடாமுயற்சியுடன் நின்று சாதித்திருக்கிறார். இவர் நம்மையாளும் பிரிட்டிஷாரால் மாத்திரம் மதிக்கப்பெற்றவர் அல்லர். உலகத்துள்ள எல்லோராலும் போற்றப் பெற்றவர். 1905-ம் வருஷத்தில் ஆம்ஸ்டர்டாம் நகரத்தில் நடைபெற்ற சர்வதேச அபேத வாதிகளின் மஹாஸபையில், நமது கிழச்சிங்கம், இந்தியாவின் அபேதவாதப் பிரதிநிதியாகச் சென்று இந்தியாவின் ஆட்சி முறைகளையும் ஜனங்களின் நிலைமையையும், உலகத்தின் பல திசைகளிலிருந்தும் அங்கு வந்து கூடியிருந்த பிரதிநிதிகளுக்கு அழுத்தமாக எடுத்துக்கூறி அவர்கள் உண்மையறிந்து உருகும்படிச் செய்தார்.

1902-ம் வருஷத்தில், தாம் பற்பல சமயங்களில் வெளியிட்டிருந்த துண்டுப் பத்திரங்களையும் வியாஸங்களையும் கமிட்டியின் முன்பு கொடுத்திருந்த சாட்சியங்களையும் ஒன்றாகச்சேர்த்து, "இந்தியாவின் ஏழ்மைத்தனமும் பிரிட்டிஷாரின் தன்மைக்கு ஒவ்வாத ஆட்சியும்" என்ற பெயருடன் ஒரு புத்தகத்தை வெளியிட்டார். இந்தியாவின் செல்வ நிலைமையையும் பொதுவாகப் பொருளாதா

ரத்தின் சாஸ்திர நுட்பத்தையும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற இச்சையுடைய மாணவர்கட்கு அதனொரு துணை நூலாகஇருக்கும் என்பதற்கு யாதும் சந்தேகம் இல்லை. அதனுள் அவர், இந்தியாவின் நிலைமையை நன்றாகவும் உண்மையாகவும் அழுத்தமாகவும் பல தேசத்தாரும் ஒப்புக்கொள்ளும்படியாகவும் வற்புறுத்தித் தெளிவித்திருக்கிறார். அந்நூலின் பெருமையே பிரிட்டிஷார்களை இந்தியர்களிடம் கண்வைக்கும்படித் தூண்டிவிட்டது. அதுமாத்திரமா? படித்த இந்தியர்க்கு இந்திய தேசாபிமானக் கண்ணையும் கொடுத்தது.

இப்படிச் சுமார் 50-வருஷகாலம் இந்திய மேம்பாட்டையே வேண்டுமென்ற முழுநோக்கத்துடன் மிகவும் இடைவிடாத விடாமுயற்சியுடன் உழைத்துவந்த தமது வயோதிகஸிம்ஹம் சென்ற பன்னிரண்டு வருஷங்களாக வர்சோவாவிலேயே வசிக்கும்படியாக நேர்ந்தது. அங்கும் பிரதிதினமும் ஸாயங்காலவேளைகளில், தமது அந்தக் கிழப்பருவத்திலும், வெளியே காற்றுவாங்கிவரும்பொருட்டுச் சவாரிபோகாமல் இருந்ததில்லை. தமது கடைசி காலம்வரையில் அவர் மிகுபலம் இழந்திருக்கவும் இல்லை. சென்ற வருஷம் கொடுக்கப்பட்ட எல். எல். டி. பட்டம் பெறுவதற்காகமாத்திரம வர்சோவாவிலிருந்து பம்பாய்ச் சர்வகலாசாலைக்கு வந்திருந்தனரே யல்லாமல், மற்றைக்காலங்களில் அந்த இடத்தைவிட்டு வெளியேறினதில்லை; என்றாலும். அங்கிருந்தபடியே தமது அபிப்பிராயங்களையும் நோக்கங்களையும் பலவிதத்திலும் பன்முறைகளிலும் தெரிவித்திருக்கிறார்.

சென்ற பலவருஷங்களாகவே இந்தியாமுழுவதுமுள்ள பல ஜாதியாரும் அவரது பிறந்தநாளை வருஷந்தோறும் பெருமையாகக் கொண்டாடி மங்களம்பாராட்டி வந்திருக்கிறார்கள். அவருடைய பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது பம்பாயிலுள்ள பெண்மணிகள் கூட்டங்கூட்டமாக அவருடைய வீட்டிற்குச்சென்று அவரை வணங்கி, அவரது உள்ளன்பு கூடிய ஆசீர்வாதங்களைப் பெற்றுவருவதுண்டு,

தமது தள்ளாத வயதிலும் அவர் இந்தியாவையும் இந்தியரின் தன்மையையும் இந்தியாவின் முன்னேற்றத்தையும் இந்தியரின் பெருக்கத்தையும் மறவாதவராக இருந்தார். வருஷந்தோறும் கொண்டாடும் கொண்டாட்டத்தில் இந்திய ஜனங்கள் தமக்குச் செய்யும் மரியாதைக்குப் பிரதியாக நல்ல புத்திமதிகளைச்சொல்லி வந்திருக்கிறார்.

எனவே, அவர் தமது இளம்பிராயத்தில் உழைத்திருந்த விடாமுயற்சியின் பயனாகவே, பொதுஜனங்களாலும் பெரிய உத்தியோகஸ்தர்களாலும், தமது கிழப்பருவத்தில் நன்குமதிக்கப்பெற்று இரண்டாவது ஸொராஸ்டராக விளங்கினர். இன்னும் விளங்கிக்கொண்டிருக்கிறார். பெருமைதங்கிய லார்ட் ஹார்டிஞ்ஜ், லார்ட் ஸைடன்ஹாம், லார்ட் வில்லிங்டன் முதலிய தேசாதிபதிகளும் பேட்டி காணவென்றே வர்சோவாவுக்குச் சென்று, அவரது க்ஷேமலாபங்களை விசாரித்து அவரைக் கௌரவப்படுத்திவந்திருக்கிறார்கள். மற்றும் பல தேசாதிபதிகளின் உபசாரமொழிகளையும் பெற்றிருக்கிறார்.

இவரே இந்தியாவின் மஹாபுருஷர்; ஒப்புயர்வற்ற தேசபக்தர்; சுய ஆட்சி ஸ்தாபனத்தை வேரூன்றிக் கிழங்குபற்றித் தழைக்கும்படி விதைத்த உழவாளி; யாவராலும் ஜாதி மதம் தேசம் வித்தை எனும் இவைகளால் மாறுபடாத கௌரவத்தைப்பெற்ற உத்தமன்; இனி உண்டாகப்போகும் இந்தியச்சரித்திரப் பகுதிக்கு ஒரு தக்க நாயகஸ்தானத்தை வகிக்கப்பிறந்த அவதார புருஷர். இந்த அருமையான உரு நமது கண்களைவிட்டு மறைந்துபோயினதாயினும் நாமம், என்? எல்லாரது சித்தத்தையும்விட்டு ஒருகாலும் பிரிந்து போகாது என்பது திண்ணம். எல்லாம் வல்ல இறைவன் அவரது ஆத்மாவுக்கு நற்கதிகொடுப்பதுடன், அவரிட்ட விதையை முளைக்கும்படியும் தழைத்துப் பருத்துப் பூத்துக் காய்த்துப் பழுத்து நாம் எல்லோரும் என்றும் அருந்திக் களிக்கும்படியும் செய்வாராக.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று." திருக்குறள்.

பத்திராதிபர்.

அரியூர் மிஸ்டர் S. சாமிநாதையரின் மரணம்.

நமது வித்தியாபாநுவுக்கு வெகுகாலம் உதவிப்பத்திராதிபராகவும் பத்திராதிபராகவும் இருந்து நடத்திவந்த எமது ஆப்த நண்பரும் வித்வானுமான மிஸ்டர் S. சாமிநாதையரின் மரணத்தைக் கேட்டு மிகவும் விசனிக்கிறோம். இவர்கட்குப் பாரிசவாய்வுநோய் மூன்று வருஷங்கட்கு முன்னமே ஒரு முறை கண்டது என்று கேள்வியாயிருந்தாலும், சென்ற 9—மாதகாலங்களாகத்தான் அந்த நோய் அவரைப்பிடித்துக்கொண்டு பிடித்துக்கடைசியில் அவரது உருவத்தை இந்த மாசம் 4—ம் தேதியில நமது கண்களினின்றும் மறைந்து விட்டது. இவர்கள் திருசிஜில்லா அரியூர் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். தமது சிறுவயதிலேயே மெட்ரிகுலேஷன்பரீக்ஷையில் தேறித்திண்டுக்கல்லில் E செஸ்டர் ஸ்கூலில் ஒருஉபாத்தியாயராகச் சில வருஷங்கள் உழைத்துப பிறகு அந்த ஊரில ஸ்தாபிக்கப்பெற்றுள்ள ஹிந்து ஸ்கூலில் ஒரு உபாத்தியாயராகவும் இருந்துவந்திருக்கிறார்கள். அந்த ஸ்கூல் முனிஸிபல் ஹைஸ்கூலான பிறகும் மிகவும் ஊக்கத்துடன் உழைத்திருக்கிறார்கள். 1896—ம் வருஷத்தில் மதுரை சேதுபதி ஹைஸ்கூலிலும் வெகுகாலம் வேலைபார்த்து வந்திருக்கிறார். சில வருஷங்கள் தொட்டப்பநாய்க்கனூர் ஜமீனிலும், சேதுபதி ஸம்ஸ்தானத்திலும் போதகராக (ட்யூடராக) இருந்து இளவரசினரை உத்ஸாகப்படுத்திப் படிப்பில் ஊக்கமும் தேசத்திலும் தேசபாஷையிலும் அபிமானமும் காட்டும்படிச் செய்திருக்கிறார்.

இவர்கட்கு இங்கிலிஷில் நல்ல தேர்ச்சியான பரிசயம் இருந்ததுடன், தமிழிலும் இலக்கிய இலக்கண க்ரந்தங்களின் ஆராய்ச்சி மிகுதியுண்டு. தேசாபிமானமும் மதாபிமானமும் பாஷாபிமானமும் மிகவும் வாய்ந்தவர். வர்ணாச்ரமதர்மங்களின் வரம்பு கடந்து செல்லப்படாது என்னும் பிடிவாதமான நோக்குடையவர். கம்பராமாயணத்திலும் வில்லிபாரதத்திலும் அழுத்தமான பற்றுடையவர்.

சபைகளில் தமது நோக்கங்களை எடுத்துத் தெரிவிக்கும் போது யாதும் மனக்கோழையின்றி வெகு ஊக்கத்துடன் தீர்மானமாகவே சொல்லும் ஆற்றல் அமைந்தவர். பெண்கட்குப்படிப்பு அவசியமென்பதை நல்ல ஆதாரங்களுடனும் அநுபவமுறைகளுடனும் எடுத்தோதும் முறையில் முற்போனவரென்றே சொல்லலாம். பெண்கல்வியைப்பற்றிப் பேசும்போதெல்லாம் அவர் ஆவேசங்கொண்டே பேசுவதைப் பன்முறையும் நாம் கவனித்திருக்கிறோம்.

சிரித்தமுகமும் அறிந்து அடங்கிய அகமும் உபசரிக்கும் தகவுமுடையவர். ஒருபோதும் அவரது முகத்தில் சினவுண்மை தெரிந்திலது. செய்யுட்குப் பொருள் கூறுங்கால் கவிஹ்ருதயத்தை அறிந்து தக்க ஆதாரத்துடன் உரைவகுக்க யாம் அநுபவித்திருக்கிறோம். அவரிடம் எப்போதும் ஆராய்ச்சிப் பேச்சேயன்றி வீண்பேச்சும் வழக்குப்பேச்சும் நாம்ஒருபோதும் கேட்டதில்லை. மூதுரை நல்வழி நன்னெறிகட்கும் தகுந்த உரைகொடுத்து வெளியிட்டிருக்கிறார்கள். உண்மையான ஒழுக்கமுடையவர். மதுரையில் தமிழ்ச்சங்கத்தை ஸ்தாபிப்பதன் பொருட்டு ஸ்ரீமான் பாண்டித்துரைசாமியவர்களுடன் மிகவும் ஊக்கங்காட்டியுழைத்தவர்களுள் இவரும் ஒருவர். அவருடன் பழகியவருள் அவரைப்போற்றாதாரும் அவருடைய சொல்லை ஏலாதாரும் இலரென்றே எண்ணுகிறேன். அவர்கட்கு வயது இப்போது 57—இருக்கலாமானாலும், தமது வீட்டில் தாமிருந்து நடத்தவேண்டிய சில வெண்ணங்களும் தமிழுலகுக்குத்தாம் செய்யவெண்ணியிருந்த பல காரியங்களும் முடிவடைவதற்கு முன்னமே இந்நிலவுலகினின்றும் மறையவேண்டியபடியாக ஈச்வர ஸங்கல்பம் இருந்தது. இந்தத் தென்னிந்தியாவிலுள்ள அவர்களது நண்பர்கள்பலரும், அவர்களது மரணத்தைக் கேட்பின் வருந்துவாரென்பது திண்ணம். விதிக்குமாறாக யாதும் செய்ய யாருக்கும் முடியாது என்ற ஒரேதீர்மானத்தையே நாம் அவரது பிரிவாற்றாமைக்கு ஆறுதலாகக் கொள்வதோடு, அவர்களது புத்திராதிய குடும்பத்தார்க்கும் எமது அநுதாபத்தைத்தெரிவிக்கிறோம்.

பத்திராதிபர்.

கோநகர்

ஐந்தாவது வருஷத்து ஆண்டு நிறைவுக்கொண்டாட்டம்.

கோநகர் ஞானசம்பந்த நற்சபை, வாணிமந்திர புத்தகசாலை, கற்பகவிநாயக கலாசாலை என்பவற்றின் ஐந்தாவதாண்டு நிறைவுக் கொண்டாட்டத்தை முன்னிட்டுப் பிங்களஹூ வைகாசி மீ௳. ௬ (1917-ஹூ மேமீ 18, 19) ஆந்தேதிகளில் சபை நடைபெற்றது.

அக்கிராசனாதிபதி:—திருச்சிராப்பள்ளி சப்ஜட்ஜி பிரும்மஸ்ரீ A. S. பாலசுப்பிரமணிய ஐயரவர்கள் B. A., B. L.

அக்கிராசனாதிபதியவர்கள் முதனாளிரவே நகரத்தாரனுப்பிய மோட்டாரில் திருச்சியிலிருந்து விஜயஞ் செய்தார்கள்.

௴ ௳ பிற்பகல் 3½ மணிக்குச சபையோர் மேளவாத்யத்துடன் சென்று அக்கிராசனாதிபதியவர்களைச் சபாமண்டபத்திற்கு அழைத்து வந்தார்கள். இவ்வுத்ஸவத்தைக் கண்டு களிக்கும்பொருட்டு, தேவகோட்டை மெ. அரு. நா. இராமநாதன்செட்டியார் முதலிய ஸ்ரீமான்களும் புதுக்கோட்டை ஸமஸ்தான அதிகாரிகளும் வித்துவான்களும், ஏனையோருமாகச் சுமார் 600 பேர் கூடினார்கள். இவர்களுள் நூறுபேர் பெண்பாலர்.

வலயபட்டி வித்துவான் ஸ்ரீ திரு. இராமஸ்வாமி ஐயங்காரவர்களும் திருவையாற்று ஸம்ஸ்கிருத பாடசாலைத் தமிழபண்டிதர் ஸ்ரீ சந்தானமையங்காரவர்களும் இன்னிசையுடன் கடவுள் வாழ்த்துக்கூறினார்கள். பண்டித ஸ்ரீ அ. கோபாலையரவர்கள் வந்தனோபசாரபத்திரமும் உள்ளூர் ஸ்ரீ அரு. ராம. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் ஐந்தாம் வருடத்து அறிக்கைப் பத்திரமும் படித்தார்கள். பின்பு அக்கிராசனாதிபதியவர்கள் நீண்ட அழகிய முகவுரை கூறியவுடன் கலாசாலையில் நன்றாகத்தேறிய மாணவர்களுக்குப் பரிசுகள் அளித்தார்கள். அருப்புக்கோட்டை ரேஞ்சுஸ்கூல்களின் சப்அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வே. முத்துஸாமி அய்யரவர்களால் சீதையின் பெருமை என்பதும், க. வி. கலாசாலை மாணவர் முரு. சிதம்பரம் வயி. வயித்திநாதன் இருவரால் ஆங்கிலத்தில் கைத்தொழிற் கல்வி யென்னும் சம்பாஷணையும், ௸ மாணவன் மு. சாமிநாதனால் நன்றியறிதல் என்பதும், ௸ மாணவன் அ. இராமனால் கொலைமறுத்தல் என்பதும் அழகாகக் கூறப்பெற்றன. அனுஷ்டானாதிகளுக்கு ஓய்வுநேரம் கொடுக்கப் பெற்று 7½ மணிக்குச் சபை கூடிற்று.

புதுக்கோட்டைக் காலேஜ் உபாத்தியாயர் ஸ்ரீ. M. சிதம்பரையரவர்கள் நந்தனர் மகிமையைப் பத்திரசம் ததும்ப எடுத்துரைத்தார்கள். ப்ரசங்கங்களுக்கெல்லாம் அக்கிராசனாதிபதியவர்கள் தனித்தனி யாவரும் ஆனந்தமடைய அபிப்பிராயங் கூறினார்கள்.

௬ உ (19—5—17) சனிக்கிழமை காலை 8 மணிக்குச் சபை கூடிற்று. கடவுள் வாழ்த்துக் கூறப்பெற்றது. பலவான்குடி ஸ்ரீ ராம. கு. ராம. இராமசாமிச் செட்டியாரவர்கள் மனத்தூய்மை என்பதையும், க. வி. கலாசாலை மாணவன் சு. மு. பழனியப்பன் ஆங்கிலத்தில் பெற்றோரைப் பேணல் என்பதையும், ஷை மாணவி சொ. வள்ளியம்மை குழந்தைகளைப் பாதுகாத்தல் என்பதையும் கேட்டோர் மனம் குளிர உபந்யசித்தபிறகு, மதுரை வித்துவான் ஸ்ரீ கா. சுந்தரேசுவரையரவர்கள் கம்பர் உபமானம் என்றெடுத்துக்கொண்டு கம்பராமாயணக்கவி சிலவற்றிலுள்ள உபமான நயங்களைக் கம்பரே நேரில் வந்து சொல்வதுபோல எடுத்து விளக்கிக் காட்டினார்கள். க. வி. க. மாணவர் சு. சுப்பிரமணியனும் சா. சாமிநாதனும் அன்னதானமும் வித்தியாதானமும் என்பதைப்பற்றி நன்றாகச் சம்பாஷித்தார்கள். பகற் போஜனத்திற்கு ஓய்வு நேரங் கொடுக்கப்பெற்றுத் திரும்பவும் பிற்பகல் 3½ மணிக்குச் சபை கூடிக் கடவுள் வாழ்த்துக் கூறப்பெற்றது. புதுக்கோட்டை காலேஜ் ஜூனியர் லெக்சரர் ஸ்ரீ. P. R. மீனாக்ஷிசுந்தரமையரவர்கள் தேசபக்தி யென்பதையும், க. வி. க மாணவன் ராம. அருணாசலம் ஆங்கிலத்தில் இரண்டு நிச்சயங்கள் என்பதையும், பலவான்குடித் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. வீ. குமாரவேலையரவர்கள் கல்வியின் தற்கால நிலைமை யென்பதையும் பற்றி உபந்யசித்தார்கள். அனுஷ்டானாதிகளுக்கு ஒய்வு நேரம் விடப்பெற்றுத் திரும்பவும் 7½ மணிக்குச் சபை கூடிற்று. க. வி க. மாணவன் முரு. பிச்சப்பன் விடுமுறைநாள்கழிக்கும் விதத்தை ஆங்கிலத்திற் கூறியவுடன், மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்கள் எழுதிய பட்டினத்தடிகள் சரித்திரத்தைச் சுருக்கிச் சொல்லி விளங்கவைத்து அவர்பாடிய பதினோராந் திருமுறைப்பாடல்களிலுள்ள ஆழ்ந்த கருத்துக்களைக் கேட்டோர் மனம் உருகுமாறு கூறினார்கள். மதுரை ஹைக்கோர்ட்டு வக்கீல் ஸ்ரீ. T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் தமிழ் நூல் ஆராய்ச்சி யென்றெடுத்துக்கொண்டு தமிழ் ஏடுகள் சேர்க்கும் விதத்தையும் அதினாலாம் நன்மையையும் கூறிக் கம்பராமாயணத்திலுள்ள அருமைப்பாடல் சிலவற்றின் பொருளையெடுத்து விளக்கி இதுபோலவே ஒவ்வொரு நூல்களையும் ஆராயவேண்டுமென்று கூறினார்கள்.

அக்கிராசனாதிபதியவர்கள் ஷை உபந்யாசங்களின் சாராம்சங்களையெல்லாம் திரட்டிக் கேட்டோர்மனங்குளிர அபிப்ராயங் கூறினார்கள்.

சந்தன புஷ்ப தாம்பூலாதிகள் வழங்கப்பெற்று மங்களவாழ்த்து நிகழ இரவு 10½-மணிக்குச் சபைபூர்த்தியாயிற்று.

ஞானசம்பந்தன்.

———:(o):———

கோநகர்.

ஞானசம்பந்த சுவாமிகள் குருபூசை.

பிங்கள ஸ்ரீ வைகாசி மீ 24 (7—6—17) புதன்கிழமை காலையில் விநாயகருக்கும் சமயாசாரியர் நால்வருக்கும் முறைமுறைப்படி அபிஷேகாராதனைகள் நடந்தன. 12-மணிக்குப் பிராமண சமாராதனையும் சிவனடியார் நகரத்தார் முதலியோர்களுக்கு விருந்தும் நடைபெற்றன.

மதுரை வித்துவான் ஸ்ரீ. ரா. சுந்தரேசுவரையரவர்கள், திருவாரூர் போர்டு ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. K. M. சிதம்பரையரவர்கள், சொக்கலிங்கம்புதூர் மா. வா வித்தியாசாலைத் தமிழாசிரியர் ஸ்ரீ. செ. இராமமூர்த்தி ஐயரவர்கள், குன்றக்குடி ஸ்ரீ. சதாசிவப்பிரமம் அவர்கள், வால்குடி ஸ்ரீ. சுப்பிரமணியசாஸ்திரிகள், பலவான்குடித் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. வீ. குமாரவீரையாவர்கள் முதலிய வித்துவான்களும் தனவைசிய சீமான்களும் விஜயஞ்செய்திருந்தார்கள்.

5:—மணிக்கு மதுரை வித்துவான் ஸ்ரீ. ரா. சுந்தரேசவரையரவர்கள் ஞானசம்பந்த சுவாமிகள் சரித்திரத்தைச் சோனைமாரி சொரிவதுபோல் யாவரும் களிகொள்ளுமாறு மிகவும் அழகாக நான்குமணிநேரம் பிரசங்கித்தார்கள். வால்குடி பிரமஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரிகள் ஷை பிரசங்கத்திலுள்ள சாராம்சங்களை எடுத்துக்கூறி வியந்து பேசினார்கள்.

இரவு 9-மணிக்குப் பிரசங்கமுடிந்ததும் ஸ்ரீ. ஞானசம்பந்த சுவாமிகள் பரிமள புஷ்பாலங்கிருதராய் முத்துப்பல்லக்கில் ஆரோகணித்து திருவீதிவலம் வந்த காக்ஷி யாவர்மனத்தையுங் கவர்ந்து பக்திவலையிற் சிக்கச்செய்தது.

ஞானசம்பந்தன்.

கோதகர்

ஞானசம்பந்தநற்சபை.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜை.

பிங்கள ௵ ஆனி ௴ ௰-உ (24—6—17) ஞாயிற்றுக்கிழமை காலையில் விநாயகப்பெருமானுக்கும் சமயாசாரியர் நால்வருக்கும் வேதவிதிப்படி அபிஷேக ஆராதனைகள் நடந்தன. 12-மணிக்குப் பிராமண சமாராதனையும் சிவனடியார் நகரத்தார் முதலியோர்க்கு விருந்தும் நடைபெற்றன.

4½-மணிக்கு மதுரை வித்துவான் ஸ்ரீ. நா. சுந்தரேசவன்ரயரவர்கள் ஸ்ரீ. மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரத்தைக் கேட்டோர் மனங்குளிர நான்கு மணிநேரம் அமிருதவர்ஷம் பொழிவது போல் உபந்யசித்தார்கள். பின்பு ச. வி. கலாசாலை உதவித்தமிழாசிரியர் ஸ்ரீ. S. ஆழ்வாரையங்காரவர்கள் அந் உபந்யாசத்தை வியந்து இரண்டு வாழ்த்துப் பாக்களைக் கூறினார்கள்.

9-மணிக்கு ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள், பூக்குடை நிழற்ற வெள்ளி ரிஷபவாகனத்தின் மீது இரத்தினாபரண அலங்கிருதராய் ஆரோகணித்துக் காக்ஷியை யாவருங்கண்டுகளித்துப் பக்திபரவசரானார்கள்.

ஞானசம்பந்தன்.

வைத்தியக் குறிப்புகள்.

இருமலில் உஷ்ணஜலத்தின் உபயோகம்.

அடிக்கடியும் காசத்தினால் வருந்துபவருக்கு திடீரென்று உண்டாகும் இருமலைத்தடுப்பதற்கு உஷ்ணஜலம் சிறந்த ஒளஷதம் என்று அறியப்படுகிறது. முக்கியமாக கூடிய காசத்தில் தற்காலம சாந்தியுண்டுபண்ணுவதற்கு இதை உபயோகிப்பது நலம். திடீரென்று வேகத்துடன் கிளம்பும் இருமல் உஷ்ணஜலத்தை இரண்டு மூன்று விழுங்குகள் உட்கொண்டவுடனே ஆச்சரியப்படும்படி தணிவடையும். இருமலுக்கு முக்கியமாக உபயோகிக்கப்படும் வேறு ஒளஷதங்கள் ஜீர்ணசக்தியையும் பசியையும் கெடுத்துவிடுவது வழக்கம். ஆனால் உஷ்ணஜலமோ தேஹத்தில் இயற்கையில் நடந்தேறும் ஜீர்ணவேலை

முதலிய எச்செயல்களுக்கும் சிறிதும் விரோதம் செய்யாமல் இருமலைத் தணிக்கச்செய்யும் இயல்புடையது. இருமலின வேகம் தோன்றும் போதெல்லாம் நன்கு கொதிக்கவைத்த ஜலத்தை உட்கொள்ளவேண்டும்.

American medicene.

குழந்தைகளுடைய அதிசாரத்துக்கு.

சில குழந்தைகளுக்கு ஸாதாரண அதிசாரமும் ஒவ்வொருஸமயத்தில் அபாயகரமான நிலைமையையுண்டுபண்ணும். ஆகவே அதிசாரம் ஏற்பட்டவுடனே, வேறு சிகித்ஸைகளுக்காகப் பிரயத்தனப்படுவதற்கு முன்பாக, ஸோடா எனப்படும் உவர்க்கார ஸத்துவத்தை ஒரு தேக்கரண்டியளவு வீதம் கொதித்த ஜலத்தில் கரைத்து தினத்துக்கு மூன்றுவேளை உபயோகிக்கவும். இது வயிற்றில் உள்ள நாட்பட்ட புளிப்பைத் தணியச்செய்து அதிசாரத்தையும் தடுக்கும்.

The Doctor.

கறியுப்பால் கீழ்க்குடலிலுள்ள கிருமிகளை அழித்தல்.

ஒருதேக்கரண்டியளவு கறியுப்பை இரண்டுபைந்த வெந்நீரில் கரைத்து இளஞ்சூடாயிருக்கையில் ஆஸனத்வாரத்தின் மூலமாய் இரவில் படுக்கைக்குப் போகையில் உட்செலுத்திவிடவும். மூன்று, நான்கு தினங்கள் வரிசையாகப் பிரயோகித்தால் கிருமிகள் அழிந்து விடுகின்றன.

வைத்தியகலாநிதி.

குழந்தைகளுக்கு சில வியாதிகளின் முக்கியமான குறிப்புகள்.

டாக்டர் H. C. ஹிரூவியர், M. D. என்பவர் ஒரு வைத்தியப் பத்திரிகையில் அடியில் வருமாறு சில குறிப்புகள் எழுதுகிறார்:—

கக்கிருமல்:—குழந்தை திடீரென்று வாயை நன்கு திறந்து வீரிட்டு அழும்.

வயிற்றுவலி—கால்களை வயிற்றுப்பக்கமாக அடிக்கடி மடக்கிக்கொண்டு மீண்டும் நீட்டி நீட்டி அழும். முகம் சிவந்திருக்கும். அழுகை வெகு பலமாயிருக்கும். முகம் சுருங்கி வெறுப்புடையதாகத் தோற்றும்.

அபந்நியாஸஜ்வரம்:—Pneumonia fever அடிக்கடி துரிதமாகப் பக்கவாட்டில் சாய்ந்துபடுக்கும். இரண்டுகால்களையும் ஒன்றாகத் தூக்கிப்போடும். முகம்கடுகடுப்பாயிருக்கும்.

க்ஷயம்:—முகம் ஒருவாறு மினுக்குக் கொண்டு வெறுப்புக்குறியுடன் கூடியதாயிருக்கும். விலாப்பக்கத்து மாம்ஸ பேசிகள் இழுக்கப்பட்டு முரண்பட்டிருக்கும்.

இருதயவியாதி:—முகத்தில் தென்பில்லாமல் கவலை மேலிட்டிருப்பதாகத் தோற்றும். கண்கள் விரிந்து எக்கமுற்றிருப்பதாக காணும். முகத்தின் மாம்ஸபேசிகள் ஒருவாறு நீண்டு முகத்தை நீளமாகச் செய்திருப்பதுபோலத்தோற்றும்.

மூளை வியாதிகள்:—முகத்தில் இயற்கைக்கு விரோதமான ஏதேதோ விகாரங்கள் தோன்றும். கண்கள் மூடியிருக்கும். தலைசாய்ந்து நிற்கும். உதடுகள் ஒன்றோடொன்று சேர்ந்துகொண்டு வாய் எளிதில் திறக்கமுடியாமல் போய்விடும்.

நீடித்தஅஜீர்ணம்:—வாந்தியும் குமட்டலும் அடிக்கடி யுண்டாகும். இத்துடன் வயிற்று வலிக்குக் கூறிய குறிகளும் காணப்படும்.

சூரியகாந்தி

அநேகம் தோட்டக்கால்களில் இப்பூண்டைக் காணலாம். இதன் புஷ்பங்கள் வட்டமாகவும் விசாலமாகவும் அழகாகவும் இருக்கும்.

இதன்வித்துக்களிலிருந்து எடுக்கப்படும் தைலம் சுத்தமான நிலையில் பாதுவங்கொட்டை யெண்ணெய்க்கு அல்லது ஆல்மண்ட்(சேதவிருக்ஷத்தைலம்) எண்ணெய்க்குச சமானமான குணமுள்ளது. பனி வெடியினால் கால் முதலியவற்றி லுண்டாகும் வேதனைகளில் இது மிக்க உபயோகமான தைலம்.

புதுவயல்

ஞானப்பிரகாச சபையின்

இரண்டாம்வருஷப் பூர்த்திக்கொண்டாட்டம்.

இச்சபையின இரண்டாம் வருடக்கொண்டாட்டத்திற்காக அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் மேள தாள முதலிய மங்களவாத்தியங்களுடன் அக்கிராஸனாதிபதியாகிய ஸ்ரீமான் எஸ். ஆர். எம். எம். வி. டி. பெத்தாச்சி செட்டியார் எம். ஆர். ஏ. எஸ் அவர்கள் நகரத்தார் அவர்களால் வரவேற்கப் பெற்றார். கடவுள் வாழ்த்துக்கூறிய பின்னர், சபையின் காரியதரிசியாகிய ஸ்ரீமான் வீர. சோமசுந்தரஞ்செட்டியாரால் வந்தனோபசாரம் பத்திரிகை படிக்கலாயிற்று. ஞானப்பிரகாச கலாசாலைத் தமிழாசிரியர் வி. துரைசாமித் தேசிகர் அவர்களால் அறிக்கைப்பத்திரம் படிக்கலாயிற்று. அதன் பின்னர் அக்கிராசனாதிபதி அவர்கள் முன்னுரை பின்வருமாறு பதில் அளித்தனர்.

நீங்களெல்லோரும் ஏகோபித்து ஒரேமனதாய் என்னை அக்கிராஸனம் வகிக்கும்படி கேட்டதற்கு யான் அந்தப்பதவிக்கு அருகனல்லனென்று நான் முற்றிலும் நம்புகிறேன். என்னை விடக் கல்வியில் சிறந்தவர்கள் அக்கிராஸனம் வகித்திருப்பார்களேயானால் மிகவும் பொருத்தமாயிருக்கும். ஆனால் நீங்கள் என்னை அக்கிராஸனம் வகிக்கும்படி வேண்டிக்கொண்டதானது உங்களுடைய முழு அன்பையும் விஸ்வாஸத்தையும் காட்டுகிறதேயன்றி வேறல்ல. என் இனத்தார் மத்தியில் அக்கிராஸனம் வகிக்கும்படி வேண்டிக்கொண்டதானது யான் செய்தபாக்கியமே என்று நினைக்கிறேன் என்று மிகவும் உற்சாகத் தொனியுடன் எடுத்துரைத்தனர். அதன்பின்னர் ப்ரம்மஸ்ரீ லால்குடி சுப்பிரமணிய சாஸ்திரிகள் சண்டேசுவரநாயனார் சரித்திர தத்துவம் என்ற விஷயத்தைப் பின்வருமாறு பேசினார். சண்டேசுவரர் இளம்பிராயமுதல் கொண்டே ஜீவகாருண்யத்தில் சிறந்தவரென்றும், மாடுகளெல்லாம் இவரிடத்தில் வந்து பாலைச்சுரந்து கொடுத்துவிட்டுப் போகுமென்றும், அப்பாலை இவர் ஸ்ரீ சிவபிரானுக்கே அர்ப்பணம் செய்கிறதென்றும் இப்படிப் பசுக்கள் பாலை சுரக்கிற விஷயத்தை அறிந்த சொந்தக்காரர்கள் சண்டேசுவரர் தகப்பனாரிடம் சொல்லவும் அவர் மகன் செய்யும் திருவிளையாடல்களைக்கண்டு மனம் சகித்

ஷ்தவராய் நிஷ்டையிலிருக்கும் சண்டேசுவரரை காலால் உதைக்கவும், அதனால் நிஷ்டைக்குப் பாதகம் வந்ததைக் கண்ணுற்ற அவர், தன் தகப்பனென்றும் பாராமல் அருகிலிருந்த தடியையெடுத்துத் தகப்பனாரின் காலைமுறித்து விட்டார். இதனால் நாம் அறிந்துகொள்ளும் தத்துவம் என்னவென்றால், யாவரொருவர் ஈஸ்வரன்பால் உண்மையான பக்தியைச் செலுத்துகிறாரோ அவருக்கே மோக்ஷசாம்ராஜ்யம் கிடைக்குமென்றும் அப்படியில்லாமல் பக்தியைச் செய்யாமல் நிஷ்டையிலிருக்கும் சாதுக்களைப பங்கப் படுத்துகின்றானோ அவன் நரகலோகம் அடைவானென்றும், இதற்கு திருஷ்டாந்தமாக அநேக உபகதைகளை எடுத்து அழகாகப் பிரசங்கித்தனர். வலையப்பட்டி தமிழ் வித்வான் ப்ரம்மஸ்ரீ ராமசாமி ஐயங்கார் அவர்கள் "நப்போல்வளை" என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு அதில் ஔவைப் பிராட்டியார் இயற்றியகருத்தையும் அவருடைய திறமையையும் வெகுஅழகாய் எடுத்துப் பிரசங்கித்தனர். இராமரும் பரதரும் என்ற விஷயம் ஞா. க. மாணவர்களால் ஆங்கிலத்தில் சம்பாஷிக்கப்பட்டது. செய்யுட்களெல்லாம் கலாசாலை இங்கிலீஷ் உபாத்தியாயர் மிஸ்டர் மீனாக்ஷிசுந்தரமய்யர் அவர்களால் இயற்றப்பட்டவை. சபையோர்களுக்கு எளிதில் உணரும்படியாய் மிகவும் அழகாய அர்த்தபுஷ்டியுடன் வாய்ந்திருந்தது. இல்லறவாழ்க்கை என்றவிஷயததை விவேகோதய உதவிப்பத்திராசிரியான சகோதரி ஸ்ரீமதி வி. பாலம்மாள் பின்வருமாறு பிரசங்கித்தனர். இல்லற வாழ்க்கையே ஆச்ரமங்களி லெல்லாவற்றிலும் சிறந்ததென்றும் அதற்கு இல்லாளே மிகவும் முக்கியமானவளென்றும் இவள் புருஷன் மனப்படிச் சம்பாதித்துக் கொண்டுவந்த பொருளை மிகவும் சாமர்த்தியமாய் செலவழிக்கவும், ஒவ்வொரு சமயாசமயங்களில் தக்க புத்திமதி சொல்லுபவளாகியும் இருப்பதினாலே அவளுக்குப் படிப்பு சொல்லிவைக்க வேணுமென்றும் முற்காலத்திய ஸ்திரீகள் மிகவும் கற்புடையவர்களாய் இருந்ததற்குக் காரணம் படிப்பென்றும் *ஆனதினால் ஸ்திரிகளுக்குப் படிப்பு. ஒவ்வொருவரும் சொல்லிக்கொடுக்கவேண்டுமென்றும் தக்கடமான உபமேயங்களுடன் எடுத்து அழகாய்ப் பிரசங்கித்தனர்.

சொக்கலிங்கம்புத்தூர் தமிழ் வித்வான் ப்ரம்மஸ்ரீ செ. ராமமூர்த்தி அய்யர் ஏகாக்ரசித்தம் என்ற விஷயத்தைப் பின்வருமாறு பேசினார். ஒருபொருளைப்பற்றி (கடவுளை) கவனமற்று நிற்கும் மனம்எனப் பொருள்படும் எனவும், இம்மனம் பஞ்சேந்திரியங்களையும் வாயில்களாகக்கொண்டு அவற்றிற்கு விஷயமாகும் புறப்பொருள்களை ஆசையோடு பற்றுவதில் மிகவிரைவுவாய்ந்ததெனவும் அங்ஙனம் அதுபற்றுங்காலும் விளைவது துன்பமேயெனவும் இன்ப

ம்ண்டய் விரும்புவோர் புறவிந்திரியங்களுக்கு விஷயமான வற்றுள்ள அறத்தோடு மாறுகொள்வனவற்றை முற்றும் விலக்கிப் பிறபொருள்களினும் உள்ள அவாவை நாளடைவில ஒழிக்க முயலவேண்டும் எனவும் அவாவே பிறவிக்குக் காரணமாதலால் பிறவித்துன்பத்தையும் பிறவாமையால் வருமின்பத்தையும் உணர்ந்த மேலாயினோர் யோகவுறுப்புகளாகிய இயமநியமாதி முறையே கொண்டும் பிறபயிற்சி வசத்தாலும் காமம் வெகுளி மயக்கங்களாற் சிதறிப் போகின்ற மனத்தை அது கருதியவாறே செல்லவிடாது ஹிருதயாரவிந்தத்தெழுந்தருளியிருக்கும் ஈசன்பாற் சேர்க்க, அச்சேர்க்கையில் என்றுமழியாத நித்யானந்தம் கைகூடும்; துயில்கூடுங் காலத்து மனத்திற்கு இந்திரியங்கள் சம்பந்தமில்லாமையால் ஏற்படுவது சுகமாகக் காணப்படினும் அச்சுகம் அஞ்ஞான சம்பந்தத்துடன் கூடி அறியப்படுவதாகிய தூங்காமற் றூங்குவதாகிய சுகமே சுகமென்றறிந்து அதை அடைவதற்கேற்ற மனத்தை இந்திரிய விஷய சம்பந்தமின்றி ஒருநிலைப்படுத்தல் நம்மனோர்கடமையாம் எனவும் தக்க மேற்கோட்பாடுகளுடன் எடுத்துரைத்தனர்.

ஆத்தங்குடி விவேக விளக்க வித்யாசாலைத் தலைமை உபாத்தியாயர் ப்ரம்ம ஸ்ரீ எம் சுப்பராமய்யர் அவர்கள் "நமது கடமை" என்ற விஷயத்தை எடுத்து மிகவும் அழகாய்ப் பிரசங்கித்தனர். அதில் மேது சிறந்த தேசாபிமானிகளாகிய ஸ்ரீமதி அனிபெஸன்ட் அம்மாள், மெஸ்ஸர்ஸ் அரண்டேல், வாடியா முதலியவர்கள் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருப்பதைக் குறித்தும், மேனாட்டுச்சாமான்களை வாங்குவதைநிறுத்திக் கைத்தொழிற்சாலைகளை நியமித்து நம் தேசத்துச் செல்வத்தை விருத்திசெய்து கொள்ளவேண்டுமென்றும் கைத்தொழிற்சாலைகளை திறந்து வைப்பதற்கு நகரப்பிரபுக்கள்தைரியமாய்ப் பணத்தைப்போட முன்வரவேண்டுமென்றும்மிகவும்உருக்கமாய்ப்பேசினர். உபந்யாசர்களுடைய விஷயங்களைத் தொட்டே அக்கிராஸனாதிபதி அவர்களால் பின்னுரை சொல்லப்பட்டு சபை இரவு 9-மணிக்கு நிறைவேறியது.

இரண்டாம் நாள் நடவடிக்கை.

கடவுள் வாழ்த்துக் கூறியபின்னர் சபை காலை 9-மணிக்கு ஆரம்பிக்கப்பெற்றது. கோகர்ககற்பகவிநாயக கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ப்ரம்மஸ்ரீ அ. கோபாலையர் அவர்கள் ஊழும் முயற்சியும் என்ற விஷயத்தை மிகவும் அழகாய்ப் பிரசங்கித்தனர். திருவாரூர் கமலாலனி பத்திராதிபர் மிஸ்டர் டி. வை-

தியாகராஜ ஞானியார் அவர்கள் கம்பரும் சைவமும் என்ற விஷயத்தையும் மதுரை மாணவத் தமிழ்ச்சங்க அக்கிராசனாதிபதியாகிய மிஸ்டர் ம. கோபால கிருஷ்ணையர் "தேனும் தேனீயும்" என்றவிஷயத்தையும் "பெற்றோர்கடமை" என்ற விஷயத்தை சு. ப. குமரப்பசெட்டியாரும், இந்து ஸ்திரீகள் முக்கால தற்கால நிலைமை என்ற விஷயத்தைச்சகோதரி ஸ்ரீமதி வி. பாலம்மாள் அவர்களும் முறையே பேசினார்கள். ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜி காலஞ் சென்றதைக் குறித்து தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. அக்கிராசனாதிபதி அவர்கள் முடிவுரையில் மிஸ்டர் தியாகராஜ ஞானியார் பேசிய விஷயத்தில் மதத்துவேஷங்களுண்டாக்கக் கூடியதாயுள்ள அப்போர்க்கொத்த விஷயங்களைத் தற்காலத்தில் பிரசங்கிக்கப் படாதென்றும் கம்பர் சைவராய் இருந்தாலென்ன வைஷ்ணவராய் இருந்தாலென்ன நாம் அவர் இயற்றிய நூலிலுள்ள தத்துவங்களை மட்டும் கிரஹித்துக் கொள்ளவேணுமென்றும் மிகவும் அழகாய்ப் பிரசங்கித்தனர். ஹாரசந்தனதாம்பூலாதிகள் வழங்கப்பட்டு சபை மங்களகரமாக இரவு 10 மணிக்கு நிறைவேறியது.

R. ராஜகோபாலராவ்
ப்ரஸ் ரிப்போர்ட்டர்.

கோவிலூர்

பிரம்ம வித்தியா பிரசாரண சபை

நான்காம் வருஷ பூர்த்திக் கொண்டாட்டம்.

ஸ்ரீபரமேஸ்வரனது திருவருளால் இச்சபையின் நான்காவது வருஷோத்ஸவம் நானது பிங்கள வருஷம் ஆனி மீ 31-ந் தேதி முதல் ஆடிமாதம் 9-ந்தேதி காலைமாலையாகிய இருவேளைகளிலும் கோவிலூர் வேதாந்த பாஸ்கரர் ஸ்ரீ சுப்பையா சுவாமிகள் ஸ்ரீ காசிகானந்த ஸ்வாமிகள் முதலிய சாதுக்களாலும் சாஸ்திரோத்தம பலவித்வசிகாமணிகளாலும் அரிய பெரிய விஷயங்கள் உபந்யசிக்கப்பெற்றன. தேவகோட்டை டிப்டிகலெக்டர் ராவ்பகதூர் T. N. சிவஞானம் பிள்ளை அவர்களும் தேவகோட்டை ஜமீன்தாராகிய ஸ்ரீமான் A. L. A. R. அருணாசலஞ்செட்டியாரவர்களும் அநேக சாதுக்களும் பிராமணோத்தமர்களும் நகரப்பிரபுக்களும் சுமார் 500 பேர்களுக்கு மேலாகவே விஜயஞ்செய்திருந்தனர். சபையில் பிரசங்கிக்கப் பெற்றவிஷயங்களையும் பிரசாரகர்களுடையபெயர்களையும் இங்குக் கூறுவோம்:— (1) ஸ்தலமஹிமை (2) சாதுசங்க மஹிமை (3) ஸ்ரீ சங்கரவிஜயம் (4) புருஷார்த்தம் (5) ஜீவன்முக்திலக்ஷணம் (6) வருணாச்ரமதர்மம் (7) பக்தி (8) வேதாந்திகளே உயர்ந்த உபகாரகர் (9) சதுர்வேதத்தத்

பர்யம் (10) பக்தி (11) பஞ்சசோக விசாரம் (12) திரிபுடி (13) ஆகம முடிவு (14) ஸ்ரீராமபிரான் மஹிமை (15) ஸ்ரீமாணிக்கவாசகர்சரித்திரம் (16) தெய்வோபாசனை, திருப்பணிமஹிமை (17) ஈஸ்வரசங்கரப்பிரபாவம் என்றவிஷயங்களை (1) ஸ்ரீ சுப்பையா சுவாமிகளும் (2) சிவராமலிங்கஸ்வாமிகளும் (3) ஸ்ரீகாசிகாநந்தஸ்வாமிகளும் (4) ஸ்ரீசிதம்பரராமலிங்கசுவாமிகளும் (5) ஸ்ரீ சுப்பையாசுவாமிகளும் (6) வால்குடி ப்ரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளும்

(7) குன்றக்குடி	,,	சதாசிவக்குருக்கள் அவர்களும்
(8) கோவிலூர்	,,	சுப்பிரமணிய சாஸ்திரிகளும்
(9) நீடாமங்கலம்	,,	சுப்பிரமணிய சாஸ்திரிகளும்
(10) சாக்கை	,,	கிருஷ்ணசாஸ்திரிகளும்
(11) சென்னை	,,	அருணசலசாஸ்திரிகளும்
(12) குன்றக்குடி	,,	விஸ்வநாதசாஸ்திரிகளும்
(13) மதுரை	,,	கல்யாணசுந்தரபட்டர் அவர்களும்
(14) காரைக்குடி	,,	M. V. கோவிந்தராஜ ஐயங்காரவர்களும்
(15) வலையபட்டி	,,	திரு. இராமசாமி ஐயங்காரவர்களும்
(16) கண்டனூர்	,,	ஸ்ரீமாந். முத்தாராமைய்யா அவர்களும்

(17) ஸ்ரீ சுப்பைய்யா சுவாமிகளும் முறையே மிகவும அழகாகவும் தக்க ஆராய்ச்சி வாயிலாகவும் கேட்போர்களின் மனது பரவசமடையும்படி நன்கு எடுத்துரைத்தனர். வித்துவான்களுக்கும் பாகவதர்களுக்கும் வேதபாடசாலை உபாத்தியாயர்கள் மாணவர் முதலியோர்களுக்கும் கோவிலூர் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிகர் அவர்களால் நன்கு பரிசனிக்கப்பெற்றன இச்சபையின் காரியதரிசியாகிய கண்டனூர் ஸ்ரீமாந் முத்தாராமையா அவர்களின் நன்முயற்சியால் மிகவும் விமரிசையாய் நடைபெற்றது. சுபம்!

R. இராஜகோபால்ராவ்
ப்ரஸ் ரிப்போர்ட்டர்.

நாட்டரசன் கோட்டை.

வித்யாபரிபாலன சங்கம்.

திருவருட்பேற்றால் இன்று (15—7—17) மாதாந்தக் கூட்டம் கூடிற்று. சிவகெங்கை யூனியன் சேர்மன் ம-ா-ா-ஸ்ரீ A. சோமசுந்தரம் ஐயரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஷெ ஊர் சாமவேதம் பிர்ம்மஸ்ரீ சுந்தரசாஸ்திரிகள் "கல்வி" என்னும் விஷயத்தையும், ஸ்ரீ உ. வே. திரவி இராமய்யங்கார் "ஜடதத்துவம்" என்னும் விஷயத்தையும், உபந்யசித்தார்கள். ஸ்ரீ உ. வே [illegible] அய்யங்கார் அவர்கள் அக்கிராசனாதிபதியின்மீது ஒருவெண்பா சொன்

ஞர்கள். உபாத்தியாயர் வெள்ளைவாரணம்பிள்ளையவர்கள் "கடவுள் வழிபாடு" என்னும் விஷயத்தை பரிபவித்தார்கள். கடைசியில் அக்கிராசனாதிபதியவர்கள் விரிவாக முடிவுரைகூறச் சபைநிறைவேறிற்று. இவ்வூர் நகரத்தார்கள் சிவன் கோவிலுக்கு மேல்புறமுள்ள அக்கிரகாரத்தில் இரண்டு மாதங்களாக திரிவி. ஸ்ரீ உ. வே. ஸ்ரீராமையங்கார் அவர்களைக்கொண்டு கம்பராமாயணப்ரஸங்கம் நடத்திவருவதில், இன்று "ஸீதாகல்யாணம்" நடந்தேறியது. ஜனங்களும் பக்தி சிரத்தையுடன் கேட்டு வருகிறார்கள்.

இங்ஙனம்
காரியதரிசி.

புதுவயல் ஞானப்பிரகாச சபை.
(15—7—17)

இன்றையதினம் மாலை 4 மணிக்கு திருநெல்வேலி பிரம்ம ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள் அக்கிராஸனத்தின் கீழ் இச்சபை கூடிற்று. கடவுள் வாழ்த்து அக்கிராசனாதிபதி முகவுரை முதலியவைகள் கூறியபின்னர் சபையாரம்பிக்கப் பட்டது. கரைக்குடி கம்பராமாயண ப்ரசாரகர் ப்ரம்மஸ்ரீ எம். வி. கோவிந்த ராஜையங்கார் திருவிளையாடற்புராணத்தில் "தாடகைப்பிராட்டியார் திருவவ தாரம்" என்ற அரியசரிதையை உபந்யாஸம் செய்தார். புதுக்கோட்டை பிரம்ம ஸ்ரீவைத்தியநாத ஐயர் "தமிழ்ச்சங்கமும் சங்கப்புலவர்களும்" என்ற அருமை யான விஷயத்தை எடுத்து அதில் கபில சரிதத்தை மிக்க ஆழ்ந்த ஆராய்ச்சி யுடன் செய்யுட்களால் மிகவும் நன்றாய் எடுத்துரைத்தார். அதன் பின்னர், சுதேசமித்திரன் பிரதிநிதி மிஸ்டர் ஆர். ராஜகோபாலராவ் "பத்திரிகையும் அதன்பயனும்" என்ற விஷயத்தை யெடுத்து, அதில் பத்திரிகை என்றால் என்ன? அதை ஏன் படிக்கவேண்டும்? படிப்பதனால் அடையும் லாபமென்ன? அப்படிப்படித்து யாவராவது மேன்மையடைந்திருக்கிறார்களா? என்ற விஷயங் களைச் சுருக்கமாய் எடுத்துப் பிரசங்கித்தார். அக்கிராசனாதிபதி அவர்கள் முடி வுரையில் தென்னிந்தியாவில் அதாவது தமிழ்நாட்டில் பத்திரிகையைப் படிக் கும் வழக்கப்ரவாதம் சுதேசமித்திரனுக்கு ஆசிரியராய் இருந்து காலஞ்சென்ற ஜி. சுப் பிரம்மணிய ஐயரால் செய்யப் பட்டதென்றும், பொதுஜன ஊக்கத் தையும் இராஜாங்கத்தாருக்கும் ஜனங்களுக்கும் உள்ள பாந்தவ்யத்தையும் க்ராமவாசிகளும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு செய் வித்த மஹான் அவரே என்றும் அவருடைய பேருதவிக்கு நம்மவருள் ஒவ் வொருவரும் அவர் நாட்டிவைத்த ஸ்வமித்திரனை வாங்கி வாசித்து இன்புற வேண்டுமென்றும் மிக்க உருக்கமாய்ப் பேசினார். இப்பெரிய ஐரோப்பிய யுத்தத்தில் நமது நேசக்கட்சியாருக்கே ஜயம் உண்டாகவேண்டுமென்று பிரார்த்

தின் காரியதரிசியால் கொண்டுவரப்பட்டு எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது. ஹார சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்று சபை மங்களகரமாய் இரவு 8—மணிக்கு நிறைவேறியது.

R. RAJAGOPALAROW,
சுதேசமித்திரன் ஏஜண்டு,
காரைக்குடி.

ஷண்முகநாதபுரம் (ஆருவயல்)

ஷண்முகவிலாச ஸபை,

10—7—17.

இன்று மாலை 4—30 மணிக்குத் திருவருட் பெற்றுல் சபை கூட்டப் பெற்று, அங்கத்தினர்கள் வேண்ட காரைக்குடி அஷ்டாவதானம் சிலேடைப் புலி பிரம்மஸ்ரீ சாமிநாதையரவர்கள் அக்கிராஸனத்தமர்ந்தார்கள். அவர்தம் முகவுரை கூறிய பின்னர், காரைக்குடி கம்பராமாயண ப்ரசாரகர் பிரம்மஸ்ரீ எம். வி. கோவிந்தராஜையங்கார் கம்பராமாயணம் கையடைப்படலத்தையும் வலையபுரி தமிழ்வித்வான் பிரம்மஸ்ரீ இராமசாமிஐயங்காரவர்கள் "அன்பு" என்னும் விஷயத்தையும் எடுத்துக்கொண்டு நன்றாய் உபந்யஸித்தார்கள். பிறகு அக்கிராஸனாதிபதியவர்கள் சிலேடைப் பொருள்பட முடிவுரை கூறியபின் ஹாரசந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்று ஸபை நன்றாய் நிறைவேறியது. சுபம்!!!

அரு. சித. சுப்பிரமணியச்செட்டியார்
காரியதரிசி.

மதிப்புரை.

வேதாந்ததீபிகை:—இதனது ஆனிமாதத்திய சஞ்சிகை வரப்பெற்றோம். அர்ஜுனன் ஜககேர்தினி; ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் சரித்திரம் ப்ரபந்ந விஷயம் முதலிய வியாஸங்கள் மிகவும் அருமையாக எழுதப்பெற்றிருக்கின்றன.

ஔவை (ஒரு சிறு தமிழ் வாசகநூல்) இது வேலூர் வூர்ஹீஸ் காலேஜ் பிரதம தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் பு. அ. ஸ்ரீநிவாஸாசாரியர் அவர்களால் எழுதப்பெற்று, ஜனோபகாரி ஆபீஸாரால் பிரசுரிக்கப்பெற்றது. இதனுள், நம் தமிழ் மூதாட்டியாகிய ஔவைப் பிராட்டியாரது சரிதம் மிகவும் விரிவாகவும் தக்க ஆதாரங்களுடனும் எழுதப்பெற்றிருக்கிறது. இச்சிறு நூல் பள்ளிக்கூட

மாணவர்கட்கு அத்யாவச்யமான உதவி புரிவதுடன் ஏனையோர்க்கும் பயன் தந்து நிற்கும். பிரதிதினம் அம்மூதாட்டியினுடைய வசனங்களையே உச்சரித்துக்கொண்டிருக்கும் கடி தென்னாட்டில் உள்ளயாரும் அவ்வம்மையாரது சரித்திரத்தை அவசியம் தெரிந்திருக்கவேண்டிய தாகையால், இதனை யாவரும் எளிதில் பெறும்படி இதன் விலை அணா 0—6—0 ஆகவே ஏற்படுத்தப்பெற்றிருக்கிறது. எல்லாரும் வாங்கிப்படிக்கவேண்டியது அவச்யம். வேண்டியவர்கள், வேலூர் ஜனோபகாரி ஆபீஸ் மானேஜருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

பொதுக் குறிப்புகள்.

கிராமாந்தரங்களில பொது அறிவை விருத்திசெய்தல்.

சௌக்கியம் சுகாதாரம் விவசாயம் ஐக்கியம் முதலிய பல விஷயங்களைப் பற்றி நாட்டுப்புறங்களிலுள்ள ஜனங்களுக்குத் தேசபாஷைகளில் பிரஸங்கஞ் செய்து அவர்களுக்குப் பொது அறிவை விருத்திசெய்வதற்காகக் கொச்சி சமஸ்தான அதிகாரிகள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்தப்பிரசங்கங்களெல்லாம் கிராமாந்தரங்களிலுள்ள கல்வியறிவற்ற ஜனங்களுக்குத் தெளிவாய் விளங்கும்படித் தக்க மனிதர்களைகொண்டு செய்விக்கப்படும் என்று தெரிகிறது. இதுபோல் மற்ற இடங்களிலும் ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமாகும்.

ஒரு ஜோஸ்யம்.

ஜப்பானில் பலவித உத்தியோகங்களை வகித்தவரான யூஷோதமா மோட்டோ என்பவர் ஜோஸ்யசாஸ்திரத்தில் மிகுந்த தேர்ச்சியுள்ளவர். இப்போது நடக்கும் ஐரோப்பியயுத்தத்தைப்பற்றி 1912-ம் வருஷத்திலேயே இவர் கூறியிருக்கிறாராம். அவர் இந்த யுத்தம் 42-மாதம் நடக்குமென்றும், அந்தப்படி அடுத்த ஆகஸ்டுமாதத்திற்கும் நவம்பர்மாதத்திற்கும் இடையில் யுத்தம் முடிந்துவிடுமென்றும் நவம்பர் மாதத்தில் நேசராஜாங்கத்தாரின் சேனைகள் ஜர்மனியின் நலைநகரமான பெர்லின் பட்டணத்தைக் கட்டிவிடுமென்றும் கூறுகிறார். கிறிஸ்தவர்களின் வேதமான பைபிளில் இந்த விஷயங்கள் குறிப்பாகக் காணப்படுகின்றனவென்று அவர் சொல்லுகிறார். 1920—ம் வருஷத்தில் ஜப்பான் சீனு அல்லது வேறு ஒரு தேசத்துடன் சண்டை செய்ய நேரிடுமென்றும் அது சீனுவுடன் ஐக்கியப்பட்டு ஒத்துவாழ்தல் நல்லதென்றும் அவர் கூறுகிறார். அவர் இன்னும் ஒரு பெரிய யுத்தம் வருமென்று கூறுகிறார். அது மிகப் பெரிய யுத்தமாயிருக்குமென்றும், அது ஜர்மன் சக்கிரவர்த்தியின் குமாரரால் நடத்தப்படுமென்றும் இது முடிந்தபின் உலகத்தில் சமாதானமே பரவுமென்றும் அவர் அபிப்பிராயப்படுகிறார். இந்த வருஷமுதல் ஒரு புதிய யுகம் தொடங்குகின்றதென்றும் அவர் கூறுகிறார்.

திராவிடபத்திரிகை.